சிந்தனைக் கனல்

கவிஞர் சின்னதுரை

சிந்தனைக் கனல்

(கவிதைகள்)

அன்புடன்,
அ.வே. [illegible]
19-3-03

சின்னருணா
அ.பழனியாண்டி

சின்னருணா பதிப்பகம்
70300, செரம்பான், மலேசியா.

சின்னருணா வெளியீடு - 4

முதற்பதிப்பு : பிப்ரவரி, 2002

நூல் கிடைக்குமிடம் :

A.PALANIANDY
151, JALAN RJ 1/2
TAMAN RASAH JAYA
70300 SEREMBAN
NEGERI SEMBILAN
MALAYSIA.

திருவள்ளுவர் பதிப்பகம்,
திருவள்ளுவர் சாலை,
திருவள்ளுவர் நகர்,
வைரிசெட்டிப்பாளையம்,
தமிழ்நாடு, இந்தியா - 621 012.
தொலைபேசி : 04327 - 52103.

அச்சிட்டோர் :

வாஞ்சி மறுதோன்றி அச்சகம்,
துறையூர், தமிழ்நாடு,
இந்தியா - 621 010.
✆ 04327 - 43638.

உரியதாக்கல்

ஈரைந்து திங்களென்னைச் சுமந்து பெற்று
இனிமைப்பால் நல்லூட்டி வளர்த்துக் காத்து
சீராட்டிப் பேணியவள் சுகத்தை ஈந்து
செழுமையுற ஆளாக்கி மறைந்த தாயே!
பாரினில்நல் பேரோடு புகழில் வாழ
பொறுப்போடு கல்விதன்னைப் பெறவே செய்த
வீரத்தந் தையாரேயுங் களிருவர் பாதம்
வணங்கியேஇந் நூல்உரிய தாக்கு கின்றேன்!

அணிந்துரைக் கவிதை

அன்னையாம் தமிழ்மெழிமேல் பாசம் வைத்து
அவளுக்குத் தொண்டுசெய மனத்துள் எண்ணிச்
சின்னரு ணாளன்னும் பழநி யாண்டி
சிந்தையெலாம் தமிழ்மணக்கக் கவிதைபாட
மின்னுமணி வைரச்சொல் தேர்ந்தெ டுத்து
மேலான தமிழ்ப்பற்றாம் பொன்னா ரத்தில்
நன்றாக அழகாகப் பதித்தாற் போல
நல்லகவி மாலையினைத் தொடுத்து வைத்தார்

பாட்டெழுதிப் பாட்டெழுதிப் புலமை பெற்ற
பாவலரும் வியப்படைந்து போற்றும் வண்ணம்
தோட்டத்துத் தொழிலாளி சின்ன ருணா
தொடுத்திட்ட கவிதைகளின் சிறப்பைச் சொல்லால்
நாட்டுதற்குப் பாரதி - பாவேந்தர் இல்லை
நல்லபரி சளிப்பதற்குப் பாரி இல்லை
ஓட்டத்துப் போட்டியிலே கடைசி யாள் போல்
ஒய்வுற்ற என்னாலே சொல்லப் போமோ

ஆலயங்கள் அமைப்போரே தமிழ்வ ளர்க்க
ஆர்வமுடன் வாருங்கள் என்ற ழைத்தார்
கோலமுறு தமிழ்ப்பள்ளி தமிழ்வ ளர்க்கும்
குமிழ்தோட்டப் புறம்தமிழைத் தாங்கும் என்றார்
மேலழகுத் தாய்மொழியை மறந்த கூட்டம்
மேன்மையுற்று வளராது என்றே சொன்னார்
காலமெல்லாம் உழைப்போரே உயர எண்ணில்
கண்ணெனவே தமிழ்மொழியைக் காப்பீர் என்றார்

கடவுளிட்ட பெருஞ்சாபம் கள்கு டித்தல்
கால்நடைபோல் கிடப்பதுவும் பாபம் என்றார்
குடியாலே நம்முடைய இனத்து மக்கள்
குணங்கெட்டுப் போகுதையா என்றுநொந்தார்

தடம்மாறி வீட்டைவிட்டு ஓடிப்போகும்
தங்கையரின் நிலையெண்ணி வருந்து கின்றார்
கடன்மறந்து பெற்றபிள்ளை வெறுத்திட்டாலும்
கருணைநிறை பெற்றவள்தான் துறக்காள் என்றார்

பஞ்சம்தான் விரட்டிடினும் வறுமை மிஞ்சி
பட்டினியால் வாடிடினும் சோரம் போகார்
விஞ்சுபுகழ்த் தமிழ்க்கவிஞர் எந்தநாளும்
விலைபோக மாட்டார்கள் ; அயலாருக்கு
அஞ்சிவிட மாட்டார்கள் அழிவு வந்து
ஆபத்து நேர்ந்தாலும் பணியார் என்றே
செஞ்சொல்லால் தமிழ்க்கவிஞர் திறத்தையெல்லாம்
சிறப்பாகச் சொன்னவர்தாம் சின்னருணா,

தமிழ்விற்றுத்தம்முயிரைக் காக்க எண்ணும்
தன்மையினர் உலவுகின்ற இந்த நாளில்
தமிழுக்கே என்னுயிரைத் தருவேன் என்று
தளராத கொள்கையொடு உழைக்கும் தீரர்
தமிழ்மொழியில் மேலான கவிகள் யாக்கும்
தமிழ்சின்ன ருணாவாம் பழநி யாண்டி
தமிழ்மொழிபோல் செழித்தோங்கிச் சிறந்து வாழ்க!
தண்புவியில் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

நேரிசை வெண்பா

தோட்டப் புறக்கவிஞர் தூய தமிழ்க்கவியாம்
பாட்டாலே என்னைப் பணிவித்தோன் - பாட்டாளி
சின்னரு ணாவென்னும் சீர்பழநி யாண்டியவர்
மன்னெடுநாள் வாழ்க! மகிழ்ந்து.

இவண்,

புலவர் ஆ.இராமசாமி,
முன்னாள் தமிழாசிரியர்,
புனித மரியன்னை மேனிலைப்பள்ளி,
திண்டுக்கல் – 624 001.

6/832, நெல் மண்டிச் சந்து,
காசுக்கடைத்தெரு,
தஞ்சாவூர் – 9.

சிந்தை கவரும் சிந்தனைக் கனல்!

கவிஞர் பொன்னடியான்

'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!' என்றார் உலகப்பெருங்கவிஞர் பாரதியார்.

பாட்டின், கவிதையின் பயன் கருதி அதன் வருங்காலத் தேவை கருதி உணர்ந்து உணர்ந்து எழுதிய அப்பெருங்கவிஞரின் கவிதை நோக்கத்தின் வழியில் கவிஞர் சின்னருணா அவர்களின் இந்நூலின் கவிதைகள் உள்ளன.

எதிலும் மரபு தேவை-எதற்கும் எல்லை தேவை-வரம்பில்லா மனித வாழ்க்கை திசைமாறித் தேய்ந்துவிடும் என்ற உண்மை உணர்ந்த தமிழ்நெஞ்சத்திற்குச் சொந்தக்காரரான கவிஞர் சின்னருணா அ.பழனியாண்டி அவர்களின் இத்தொகுப்பின் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு விதத்தில் என் உள்ளத்தைத் தொட்டது.

படைப்புகள் எதற்கும் ஒரு நோக்கம் தேவை! இலக்கு இல்லாத, குறிக்கோள் இல்லாத, நோக்கம் இல்லாத எந்தப் படைப்பும் பயனற்றதே! இதை உணர்ந்து கவிஞர் ஆக்கி நமக்களித்துள்ள இத்தொகுப்பின் கவிதை ஆக்கங்கள் தமிழனுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, மனித சமுதாயத்திற்கே பயன்படும் சிந்தனைக் கருவூலங்களாகப் பளிச்சென முகங்காட்டுகின்றன.

எங்கும் சிறுபிள்ளைத் தனமான உரைவீச்சாளர் புற்றீசலாய்ப் பெருகி, தமிழின் வேரிலேயே வெந்நீர் ஊற்றிச் செந்தமிழ்க் கவிதையின் சீரழித்துவரும் இவ்வேளையில், கவிஞர் சின்னருணா போன்றவர்கள் அத்தீமைப் போக்குகளை நன்குணர்ந்து தேனாய் இனிக்கும், தென்றலாய்க் குளிர்விக்கும் நல்ல கவிதைகளை நமக்களித்து மகிழ்விக்கின்றார். சிந்தனைத் திறனும், கற்பனை வளமும், சமுதாய நோக்குமுடைய கவிதைகள் யாக்கும் இக்கவிஞர் மேலும் பல கவிதைகளை, நூல்களைத் தமிழுலகத்திற்கு அளித்து பெருமைபெற வேண்டும் என நெஞ்சார வாழ்த்துகிறேன்.

வெல்க!

‘முல்லைச்சரம்’ அன்புடன்,
43, துரைசாமி சாலை, **பொன்னடியான்.**
சென்னை – 26.

முன்னுரை

என் நெஞ்சச் செடியில் அவ்வப்போது பூத்த கவிதை நறுமலர்களைக் கொய்து மாலையாகத் தொகுத்து தந்திருக்கிறேன்.

அவை உங்கள் உள்ளத்தில் மணம் பரப்பி மகிழ்விக்கும் என நம்புகின்றேன்.

மரபுக் கவிதையா புதுக்கவிதையா என்னும் போட்டியில் இளைஞர்களைக் கவரும் புதுக்கவிதை கம்பீர நடைபோடும் இத்தருணத்தில் மரபுக்கவிதையை வெளியிடுகின்றேன்.

தமிழுக்கு மகுடம் சூட்ட எந்தத் தோற்றத்தில் உருவெடுத்து வந்தாலும் அதனை மனந்திறந்து போற்ற வேண்டும்.

ஆனால் அதற்காக இலக்கணக் கட்டுப்பாடுள்ள மரபுக் கவிதை தேவையில்லையென்றும், இலக்கணக் கட்டுப்பாடில்லாமல் எப்படி வேண்டுமானாலும் எழுதக்கூடிய புதுக்கவிதையே போதுமென்றும் வாதிடக் கூடாது.

இன்று கவிதைக்குக் கட்டுப்பாடு – இலக்கணம் தேவையில்லை என்று கூறுபவர்கள், நாளைக்குத் தமிழ் மொழிக்கே இலக்கணம் தேவையில்லை, எப்படி வேண்டுமானாலும் விருப்பம்போல் எழுதலாம் என்றும் சொல்லக்கூடும்.

அதாவது இப்படித்தான் வாழ வேண்டுமென்று கோடு போட்டு வாழ்வதைக் காட்டிலும் எப்படியும்

வாழ்ந்துவிட்டுப் போகலாம் என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

எனவே, புதுக்கவிதையானாலும் அதுவும் ஓரளவுக்கு இலக்கண வரம்போடு எழுதப்பட வேண்டுமென்பதே எனது வேண்டுகோள். வேண்டாத வடசொற்களைப் புகுத்தி விளங்காத நடையில் புதுக்கவிதைகளை எழுதுவதையும் தவிர்க்க வேண்டும்.

நிற்க, தற்போதைய நமது சமுதாயப் பிரச்சனைகளை உள்ளடக்கிய கருத்துக்களைக் கொண்டு எனது கவிதைகளை உங்கள் கரங்களில் தவழ விடுகிறேன்.

அவை உங்கள் உள்ளத்தை அள்ளுகிறதோ ... கிள்ளுகிறதோ ... நானறியேன்!

இந்நூலுக்கு சிறப்புரை எழுதியுள்ள 'முல்லைச்சரம்' ஆசிரியர் கவிஞர் பொன்னடியான் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கியுள்ள தஞ்சை புலவர் ஆ.இராமசாமி அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியுள்ள என் இனிய நண்பர் வைரிசெட்டிப்பாளையம் புலவர் ஆ.வே.இராமசாமி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சின்னருணா

(அ.பழனியாண்டி)

151, JALAN RJ 1/2

TAMAN RASAH JAYA

70300 SEREMBAN

NEGERI SEMBILAN

MALAYSIA.

தமிழே ..!

1. எங்கள் தமிழுக்கு இணையாகுமா!

ஆயிரம் மொழிகள் அவனியில் உண்டு
அவையாவும் சமமாகுமா - எங்கள்
அன்புத் தமிழாகுமா!

சேயின் மொழியாம் செப்பிடும் மழலை
சுவைதனை அப்பிடுமா - அஃது
செந்தமிழ் ஒப்பிடுமா!

பாயும் புனலும் காயும் நிலவும்
புவிதனை குளிர்த்திடுமா - தண்மைப்
பைந்தமிழ் வென்றிடுமா!

மாயோன் குழலும் கானகக் குயிலும்
எழுமிசை இனித்திடுமா - இன்பத்
தமிழிசை மிஞ்சிடுமா!

கன்னியின் முத்தம் கனிச்சுவை அமுதம்
காளையர் சொர்க்கமாமே - அஃது
கன்னித் தமிழாமே!

அன்னையின் பாசம் அன்புக்கோர் பாலம்
அதற்கெது இணையாகுமோ - தமிழே
அதுவன்றி வேறாகுமோ!

கண்கழைச்சாறும் கான்மலைத் தேனும்
கற்கண்டாய் தித்திக்குமா - நறுங்
கனித்தமிழ் ஒத்திடுமா!

தென்றலின் சுகமும் தேன்மலர் மணமும்
தந்திடும் இன்பமாமே - எங்கள்
தமிழுக்கு ஈடாகுமோ!

2. உலகெங்கும் ஒலித்திடுக

எந்தமிழர் சிந்தையிலே விந்தையென
மந்தமதி சொந்தங்கொளும் - அந்தபயன்
செந்தமிழே சொந்தமொழி என்னுமந்த
பந்தஉணர் நந்தவில்லை
முந்தையரும் தந்தையரும் வந்தவரும்
நந்தமிழை முந்திவைத்தார் - இன்றோ
சொந்தமக்கள் அந்தரத்தில் பிந்தவிட்டு
சந்தியிலே பந்திவைத்தார்.

இளமையிலும் பழமையிலும் இனிமையிலும்
தமிழன்றி மொழியேது - பல
உலகாளும் மொழிதன்னில் அழகான
வளமான மொழியன்றோ
வழுவில்லா இலக்கணத்தில் கொலுவீற்றி
வலுவோடு இலங்குதன்றோ - அதனை
விழியாக உயிராக உலகெங்கும்
ஒலித்திடுதல் மேலன்றோ!

மன்னவரும் பண்ணவரும் இன்னமுதம்
என்னும் மொழி இதுவன்றோ - கலை
வண்ணத்திலும் பின்னிவரும் பண்ணில்வரும்
கன்னல்மொழி வேறுண்டோ
விண்ணகமும் மண்ணகமும் தென்னகமும்
எண்ணற்கிடை எழில்தமிழே - இதனை
இன்னமும்நல் எண்ணமின்றி பின்னடையும்
மண்தமிழர் வாழ்முறையோ.

3. ஆவியெனைத் தாங்கிடுமோ

பாவலரில் நாவினிலே தேனூற
பண்ணிசைக்க பொருளாகும் செந்தமிழே!
நாவலரின் சொல்லினிலே மணம்பரவி
நாற்றிசையும் புகழ் மணக்கும் நற்றமிழே!
காவியமும் பாயிரமும் உனைப்பாடி
காலமகள் காவலுறும் முத்தமிழே!
ஆவியெனைத் தாங்கிடுமோ பூதவுடல்
ஆபத்துனை வந்துறுத்தும் போதினிலே!

வழிவழியாய் வந்தபெரும் பாவலரும்
வாழ்த்தலிலே வளர்ந்தோங்கக் செய்துவிட்டார்
அழியாது உன்னிளமை எஞ்ஞான்றும்
அடுத்தவரும் பண்பாடி காத்திடுவார்
மொழியுன்னை உயிரெனவே பேணியென்றும்
முத்து முத்துச் சொற்களினால் வண்ணமிட்டு
விழிப்புறவே பண்குவித்தான் ஓர் கவிஞன்
வேந்தன் கவி பாரதிக்கு தாசனென்பான்.

கலைபாடும் தமிழகத்து மண்தனிலே
கவின்மிக்காய் இசைதோன்றி வளர்த்தவளே
பழம் மதுரை முச்சங்கக் கூடலிலே
புலவர்தம் மடியினிலே தவழ்ந்தவளே!
அலைபாயும் கடல்கொண்ட மலையகத்து
அணைப்பினிலே உயர்ந்தவளே செந்தமிழே!
மலைபோல உலகனைத்து தமிழர்களின்
மனம் நிறைந்து ஆருயிராய் வீற்றிருப்பாய்!

4. தமிழே நம் உயிரே !

இனத்தின் உயிராய் இலங்கும் மொழியாய்
இதயம் உறையும் தமிழே - ! எங்கள்
கனத்த மனதைக் களிக்கச் செய்யும்
கனிச்சுவை நல்கும் அமுதே !
இனத்தைக் காக்க இன்ங்கண் டறிய
எங்கும் துலங்கும் ஒளியே - நயமாய்
அனைத்துப் புகழும் அணைத்துப் பழமை
அழியா புதுமை மொழியே !

தனித்தே ஒதுக்கித் தமிழர் வெறுத்து
தாழ்வுறச் செய்தும் நீயோ - சுவர்
தனிலே பந்தாய்த் துடிப்பாய் மோதி
திரும்பி எழுவாய் மேலோய்
முனிந்து கொண்டோர் முறித்து நின்றோர்
பணிந்து உன்னைத் தொழுவார் - உன்
கனிந்த மொழியால் கருணை வழியால்
காலடி தன்னில் விழுவார்

ஆங்கில மோகம் அறிவின் மயக்கம்
அருமைத் தமிழே மறப்பார் - தமிழர்
ஓங்கிய வளத்தில் உயரிய நிலையில்
உன்னையும் தூசாய் நினைப்பார்.
தேங்கிய மனதில் தூங்கிய பொழுதில்
தமிழின் சிறப்பை அறியார் - தமிழர்
ஈங்கு தோன்றிய இனிய வாழ்வினில்.
எம்மரு மொழிநலம் தெரியார்.

தமிழெம் உயிரென தாய்மொழி பற்றென
தேர்ந்தறி யாரோர் வாழ்வோ - இவர்
உமிக்கும் சமமாய் உலகில் சுமையாய்
உடலம் பெற்றிடல் பயனோ !
இமைப்பொழு தாகிலும் இன்பத் தமிழினை
எண்ணிடா தொருவன் தமிழனா - இனிக்கும்
அமுதெனும் தமிழை அழகுற உரைக்கவே
அஞ்சியே நாணுவோன் தமிழனா

கணினியில் கலந்திடும் இணையமும் இணைந்திடும்
கண்மணி நம்முயிர்த் தமிழே - அறிவியல்
பணியினில் புகுந்திடும் பயன்படக் கண்டிடும்
புவியினில் புகழ்பெறும் இனியே !
இனிஎம் தமிழரும் இனியத் தமிழினை
இழிவாய் எண்ணிடல் தவறே ! - முற்றும்
பிணியிலா வழியினில் பிழையிலா மொழியிதைப்
பாரினில் பரப்பிடல் கடனே !

5. தமிழை வளர்ப்பீர் !

மொழியை மறந்த இனமென்றும்
மேன்மை யுற்றது கிடையாது
மொழியே இனத்தின் உயிராகும்
மெய்யே அறிவாய் தமிழா நீ !
விழியை குருடாயாக்கியப்பின்
உலகில் வாழ்ந்து பயனென்கொல் !
விழியும் உயிரும் தமிழாகும்
விளங்கி தமிழா செயல்புரிவாய் !

ஆலயம் அமைக்க முனைவது போல்
அருந்தமிழ்ப் பேண மறந்துவிடின்
பாழாய்ப் போம்நம் பண்பாடு
பழங்கலை சமயமும் சிறப்பிழக்கும்
நாளை நம்மினம் பெயரிழக்கும்
நற்றமிழ் மொழியும் வழக்கொழியும்
ஆலயம் காப்போர் அறிந்திடுவீர்
அன்னைத் தமிழையும் வளர்த்திடுவீர்.

தமிழை வளர்ப்பது தமிழ்ப்பள்ளி
தாங்கிப் பிடிப்பது தோட்டப்புறம்
தமிழை பட்டண மும்பேணின்
தழைத்து செழித்து மேன்மையுறும்
தமிழை ஒவ்வொரு தமிழனுமே
தமது இல்லில் பேணிவரின்
தமிழனை தமிழும் மறக்காது
தமிழினம் நாட்டில் மறையாது.

6. தமிழை உயிராய்ப் பேணு !

தமிழா தமிழை உயிராய்ப் பேணு
தரணியில் பரப்பு - தே
னமுத மென்றே அன்னியர் சுவைத்தார்
அதனின் சிறப்பு
இம்மியள வேனும் இன்ன லுற்றால்
இரத்தம் சிந்து வெறும்
உமியென தமிழை உற்றார் இகழ்ந்தால்
உமிழ்நீர் சிந்து

மொழியும் கலையும் மறந்த இனமே
மரணம் தழுவும் - தம்
மொழியை உயிராய் மதித்த இனமே
மலையென உயரும்
வலிமை கொண்ட இனம்உரு வாக
மொழியால் இயலும் - நம்
மொழியை விற்று வளத்தைச் சேர்ப்பின்
பழியே தொடரும்

பழமை சீர்கொள் மொழியா னாலும்
இளமை உண்டு - அதற்குக்
கலையும் பண்பும் கற்றுத் தந்த
வளமும் உண்டு
இலங்கும் இசையும் இலக்கிய நயமும்
இனிதா யுண்டு - தமிழை
உலக அரங்கில் உயர்த்திப் புகழ
செய்க தொண்டு!

7. தமிழ்ப்பள்ளி காக்க திரண்டிடுவோம்

ஆயிரமாய் ஆலயமும் ஆயிரமாய் மண்டபமும்
அடுக்கடுக்காய்க் கட்டியெழில் காண்பதிலும் - மேலாம்
தாயாம் நம் தமிழுக்குத் தக்கபல பள்ளி நாட்டி
காலமெலாம் கல்விபெறல் சீரன்றோ!
ஆயாக்கொட்டைகைபோல் ஆங்காங்கு தெரிகின்ற
அவலநிலை நம்பள்ளி விலகுமென்றோ? - என்றும்
தேயாமல் தமிழ்மொழியும் திருநாட்டில் வளங்காண
தமிழ்ப்பள்ளி புதுக்கிடவே வேண்டுமன்றோ!

உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு பலகூட்டி
உரைசெய்து தமிழாங்கே போற்றுகின்றார் - தமிழ்
வளர்க்கின்ற தமிழப்பள்ளி வீழ்கின்ற நிலையிங்கே
வழிகாக்கும் தமிழர்யார் இருக்கின்றார்
பலலட்சம் செலவிட்டுப் பகட்டாக மேடையிட்டு
புகழ்மணக்க தமிழ்முழக்கம் செய்திடுவார் - இங்கே
வலுவின்றித் தமிழ்ப்பள்ளி தள்ளாடும் நிலைகண்டும்
வகையாகத் தாங்கிடவே யார்வருவார்.

தோட்டப்புறத் தமிழ்மக்கள் துடிப்போடு பட்டணத்தில்
தொழில்காண வெளியேறிச் செல்கின்றார் - அந்த
நாட்டந்தரும் செயல்தன்னை நலமோடும் வரவேற்போம்
நல்வாழ்வு எதிர்காலம் கொண்டிடவே
வாட்டந்தரும் செயலொன்றை வெளியேறும் நம்மக்கள்
விட்டாங்கே செல்வதுதான் வருத்தமொன்றே - பள்ளி
ஆட்டமுற அலட்சியமாய்க் கோட்டைவிட்டுச் செல்வதுவோ
அழிவுதன்னை எதிர்காலம் கண்டிடவே.

நாட்டிலொரு தமிழ்ப்பள்ளி நலிவுற்று அழிந்தாலும்
நமக்கினியும் புதுப்பள்ளி கிட்டாதே - அதனால்
நாட்டிலந்தத் தமிழ்ப்பள்ளி எண்ணிக்கைக் குறைவோடு
நம்பள்ளி 'லைசன்சு' ம் பறிபோகும்
கோட்டைநாம் இன்றைக்குக் குறட்டையில் விட்டுபின்
குற்றமதைப் பிறர்மீது சாட்டுவதா - இருக்கும்
ஓட்டைகள் பெரிதாகி ஒற்றுமையும் குலையுமுன்
உருப்படியாய்த் தமிழ்ப்பள்ளி காத்திடுவோம்.

பணத்தாலே ஆளுகின்ற பலபேரும் இங்குள்ளார்
பகட்டான வாழ்க்கைதனில் களிக்கின்றார் - ஆனால்
கணமேனும் தமிழ்ப்பள்ளி காக்கின்ற மனமின்றி
பிணம்போல தமிழரென இளிக்கின்றார்
இனப்பற்றும் மொழிப்பற்றும் இல்லாத இவராலே
எங்ஙனம்இக் குமுகாயம் முன்னேறும் - நாட்டில்
தினந்தினமும் மரணத்தை தமிழ்ப்பள்ளி எதிர்நோக்கும்
தடுத்திடவே எவரோதான் முன்வருவார்.

சீனரினம் நோக்கிடுவீர் சிந்தித்துத் தெளிவடைவீர்
சீனமொழி காத்திடவே விழைகின்றார் - வெறும்
பானையாய் இல்லாமல் பகட்டினையே உரைக்காமல்
பள்ளிக்கும் கல்விக்கும் உழைக்கின்றார்.
யானைபோல் பணம்பெருத்து யாமில்லை இருப்பினும்நல்
நமக்குள்ள சக்திதனை திரட்டிடுவோம் - அடுப்பு
பூனையாய் உறங்காமல் பொருளீட்டி நாட்டில்தமிழ்ப்
பள்ளிதனை உடன்காக்க திரண்டிடுவோம்.

8. தமிழில் பெயரிடுவோம்...!

இனிமையென தமிழிருக்க
எட்டிக்காயாய்ப் பிறமொழியில்
பிணியெனவே பெயரிடுதல் முறையோ - தமிழா
பெற்றதமிழ்த் தாய்கலங்கல் சரியோ !

கன்னித்தமிழ் மொழியிருக்க
கனியைப்போல் சுவைகொடுக்க
வன்மொழியில் மழலைபெயர் இடவோ - நம்
நன்மொழியாம் தமிழ்மொழியும் கெடவோ

அழகுதமிழ் சொல்லிருக்க
அருமைமிகு பொருள்கொடுக்க
எழிலற்ற வடசொல்பே ரழகோ - அதை
இட்டுஅழைப் பதிலேமகிழ் வுளதோ !

அஸ்வினியில் அழகிருக்கா
ஆஷாவெனில் விளங்கியிருக்கா
புஷ்பாவென குஷ்புவெனப் பெயரோ - சொல்
பூஜாவெனில் விஸ்வமெனில் அழகோ !

'கனிமொழி'யில் அழகிருக்க
'கலைவானி'ல் பொருளிருக்க
மணிவண்ணன் மலர்கண்ணன் எனவே - தமிழ்
மகிழ்வோடு கொஞ்சும்பே ரெழியே !

இனியென்றும் தமிழ்மொழியில்
இனிதாகப் பெயரிட்டு
கனிவுமிக சேய்தன்னை யழைப்போம் - தமிழ்
நலங்காத்து இனங்காத்து வளர்ப்போம்.

9. சரிதமே வெட்கும்

முத்தமிழ் மொழியைப் போல
　　மூவராய்த் தமிழைக் காக்க
இத்தரை மீது வாழ்ந்து
　　ஏற்றநற் றொண்டு செய்து
சொத்துபல் நலமும் துறந்து
　　செந்தமி ழொன்றே யுயிராய்
நத்தியே வாழ்ந்து அண்மை
　　நல்மனம் நைந்து போனார்.

தமிழையே யுயிராய்ப் பேணி
தமிழரும் வாழ விழைந்து
அமுதெனப் பொழிவு செய்து
ஆற்றிய தொண்டு வீணே
உமியெனப் போகக் கண்டு
உள்ளமும் அனலாய் வெந்து
குமைந்திடும் மெய்யும் குறுகி
கூட்டையும் துறந்து போனார்.

கடைதனை விரித்துக் காத்தும்
கொள்ளார் தமிழ ரென்றே
உடைபடு உள்ளத் தோடு
வள்ளலார் செப்பிய வாறே
அடைந்தனர் மூவ ரறிஞர்
அவலமாய் தமிழர் முற்றும்
இடிந்தமண் குட்டிச் சுவராய்
இழிந்தன ரென்று போனார்.

முத்தமிழ்க் காவலர் விசுவம்
மூவரில் முந்தி மறைந்தார்
கத்துக் கடலாய் முழக்கி
கன்னித் தமிழி னருமை
எத்துணைத் தெளிவா யுரைத்தும்
எந்தமிழ் மக்கள் விழியார்
மொத்தச் சக்தியான் ஈந்தும்
மாற்றமே இலையென் றுளைந்தார்.

அடுத்துக் குன்றக் குடியார்
ஆன்மீ கத்தின் தலைவர்
கடுமுழைப் பையா னீந்தும்
கன்னித் தமிழைப் போற்றி
எடுத்த கருமம் யாவும்
இறைநீர் விழலைப் போல
படுத்ததே எனமனந் தேய்ந்தார்
பாழ்படு தமிழ ரறிந்தே!

தூய தமிழைப் போற்றி
தென்மொழி தமிழ்ச்சிட்டென்றும்
தாய்த்தமிழ் இதழ்வெளியிட்டு
தன்னிகர் பாவ லேறு
ஓயாத் தமிழ்நற் றொண்டு
உயிராய்ப் பேணி வந்தும்
நேயம் தமிழ்பால் தமிழர்
நிகழா தறிந்து நொந்தார்.

எத்தனை சான்றோர் வந்தும்
எத்துணைச் சீர்மை யுரைத்தும்
முத்தமிழ் அன்னை மொழியின்
மேன்மை யறியச் செய்தும்
நத்திடா தமிழர் நிலையை
நானிலம் கடிந்து தூற்றும்
சொத்தைத் தமிழ ரென்றே
சரிதமும் வெட்கக் கூறும்.

10. சமுதாயத் துரோகிகள்

தமிழ்ப்பள்ளி மூடுஎன
தலைகொழுத் தாடுகின்ற
சமுதாயத் துரோகிகளைச்
சாக்கடையில் தூக்கியெறி !
உமிழ்ந்திருப்பார் முகத்தினிலே
உள்ளங்கட லெனப்பொங்கி
இமைமூடா உயிரோடு
இருந்திருப்பின் புரட்சிக்கவி !

பாட்டாலே அடித்திருப்பார் !
பாவிகளை சபித்திருப்பார் !
நாட்டில் தமிழ் வளர்க்காது
நாவடக்கம் கொள்ளாது
பூட்டனெல்லாம் காத்துவந்த
பைந்தமிழின் பெருமைகளை
வேட்டுவைக்க துணிந்துவிட்ட
விலைபோன வீணர்களை !

தமிழ்ப்பள்ளி பேணுதற்கு
தலைவர்பல தொல்லைபட்டு
இமைமூடா உழைப்பதற்கு
இயன்றளவு கைகொடுக்க
உமக்கெந்த வக்குமில்லை
உலுத்துப்போய் செல்லரித்த
சமுதாய சுமைகுரங்கே
சாகடிக்க முந்துவதோ !

சொந்தமொழி இல்லையென்று
சிலயினத்தார் வருந்துகையில்
செந்தமிழோ பலமொழியின்
முந்தையெனும் பல்சிறப்பை
விந்தையாக இவ்வுலகில்
வீழ்ந்திடாது கோலோச்சும்
சிந்தையினுள் உமக்கிதுவே
சற்றேனும் உறைக்கலையோ !

எத்தனையோ இனமக்கள்
இவ்வுலகில் வாழ்வதற்கு
அத்தனைபேர் அடையாளம்
அறியமொழி வழிகாட்டும்
முத்தமிழ்நம் தாய்மொழியாம் !
முன்னேற்றும் தமிழ்ப்பள்ளி !
செத்தொழிந்து போனாலது
செத்தயினம் நாமாவோம் !

11. தலையெழுத்து சரியோ... !

எழுத்தாள நண்பரோடு இனியகவி அன்பரும்
இன்பத்தமிழ் எங்களுயி ரென்பனவே முழங்குவர்,
அழகுறவே கவிதைபல அருந்தமிழில் வழங்குவர்,
அரியநல்க தைகட்டுரை எழுச்சியுற தீட்டுவர்
எழுதுவதும் இயம்புவதும் இவர்செயலி லில்லையே !
இவர்தானா இன்றமிழை ஏற்றமுறச் செய்குவார்?
வழுவின்றி வழிகாட்டி விளங்கயிவர் வேண்டுமே
வழிதவறும் மற்றவர்க்கு வழிகாட்ட இயலுமே !

விழியென்றன் தமிழென்று வீண்செப்பித் திரிவதா,
உயிரென்றும் மூச்சென்றும் வேடமிட்டு நடிப்பதா...
தலையெழுத்தைத் தமிழ்மொழியில் தீட்டயிவ ரில்லையே !
தவறிழைக்கும் பிறர்க்காயிவர் திருந்தும் வழி கூறுவர்.
அழகொளிரும் தமிழ்ப்பேரில் அசிங்கத்தலை யெழுத்தினை
ஆங்கிலத்தி லெழுதுமிவர் அருந்தமிழா போற்றுவார் !
பிழைபட்ட இவர்போக்கால் பெற்றவளும் பொறுத்திடார் !
புகழ்மிக்க எழுத்தாலும் பைந்தமிழைக் காத்திடார் !

ஏமுதலாய் 'இஜட்டு வரை ஆங்கிலத்தில் எழுதியே
இன்றமிழில் நஞ்சிட்டு இவர்பேரைச் சூட்டுவார்
ஆமிவரே தமிழ்கவிஞர் தமிழின் எழுத தாளராம்,
ஆங்கிலத்தை தமிழ்கலக்கி அவலமாக்கும் 'டமிலரோ'
தேமதுர தமிழினிலே தமிழ்ப்பேரைச் சூட்டுவீர் !
தமிழரென நாம்தானே மற்றவர்க்குக் காட்டுவீர் !
தாமதங்கொள் வேண்டாமினி தலையெழுத்தை மாற்றுவீர்
தாய்மொழியை வளர்த்திடவே மற்றவர்வழி காட்டுவீர்

12. எங்கே தமிழன்...?

இனத்தை மொழியை மறந்துமே - நல்
லேற்றம் காண்போன் தமிழனா...?
குணத்தை கொள்கை துறந்துமே - பெரும்
பொருளைச் சேர்ப்பேன் தமிழனா...?
மனத்தில் மாண்பைக் கொண்டிடா - இமய
மலையாய் வாழ்வோன் தமிழனா
தினமும் தேடிக் காண்கிறேன் - எங்கே
தமிழன் தமிழன் தமிழனே!

தனது இனத்தான் தாழ்வுற - கண்டு
துடித்தி டாதான் தமிழனா...?
பணத்திற்காக இனத்தையே - காட்டும்
பண்பைக் கொன்றோன் தமிழனா...?
பிணமாய்ப் போன மொழியினை - தெய்வம்
போற்றி மகிழ்வோன் தமிழனா...?
தினமும் தேடி உளைகிறேன் - எங்கே
தமிழன் தமிழன் தமிழனே

தாயின் மொழியாம் தமிழினை - உரைக்க
நாணு வோனும் தமிழனா...?
சேயும் தமிழைக் கற்றிடா - வாழ்வு
சீர ழிப்போன் தமிழனா...?
தூய தமிழர் நெறியினை - முற்றும்
தொலைய முறிப்போன் தமிழனா...?
நாயாய்த் தேடி அலைகிறேன் - எங்கே
நேயத் தமிழன் தமிழனே...!

மதமும் சாதியும் போற்றிடும் - அந்த
மாண்பு கெட்டோன் தமிழனா...?
விதியே யென்று உயர்ந்திடும் - வாழ்வை
வெட்டி வீழப்போன் தமிழனா...?
மதியை அடகு வைத்துமே - மாற்றான்
அடியைத் தொழுவோன் தமிழனா...?
நிதமும் அவனைத் தேடுவேன் - எங்கே
தமிழன் தமிழன் தமிழனே !

13. ஏன் பெற்றாய் தமிழ்த்தாயே ?

தமிழ்மொழி தன்னை விரும்பானை,
தாய்மொழி தன்னை வெறுப்பானை,
அமிழ்தத் தமிழைப் பாடானை,
ஆண்டவன் போற்ற மறுப்பானை,
உமியாய்த் தமிழை நினைப்பானை,
உயிரைப் பெரிதாய்க் கொள்வானை
இமயம் போலவன் புகழந்திடினும்
ஏனோ பெற்றாய்த் தமிழ்த்தாயே !

தமிழில் பெயரினைக் கொள்ளானை,
தாயை 'மம்மி'யாய் விளிப்பானை,
தம்பெயர் தலையெழுத் தினையுமே
தமிழினில் எழுதிட மறுப்பானை...
தம்பிள் ளைத்தமிழ்ப் பள்ளிக்கு
தகைவாய் அனுப்பிட தடுப்பானை,
இம்மியும் தமிழ்பற் றில்லானை
ஏனோ பெற்றாய்த் தமழ்த்தாயே !

இனிதமிழ் அரசியல் பொழியானை,
இல்லந்த தனிலது அழிப்பானை,
கனிதமிழ் வளர்த்திட ஈயானை,
கற்றநம் தமிழரை மதியானை,
தணிக்குமோ தமிழ், பசி என்பானை,
தன்னலத் தால் தமிழ் கொல்வானை,
இனிதாய் மொழியினை மொழியானை
ஏனோ பெற்றாய் தமிழ்த்தாயே !

தம் கடை தன்னில் வணிகத்தில்
தாய்த் தமிழ் எழுதிட விழையானை,
எம்தமிழ் போற்றிடும் தாளிகையை
எடுத்து வாசிட எண்ணானை,
நம்மவர் கூடிடும் வேளைதனில்
நற்றமிழ் பேசிட தவிர்ப்பானை
இம்மா வுலகு வெட்கிடவே
ஏனோ பெற்றாய்த் தமிழ்த்தாயே !

புலவரே...!
அறிஞரே...!

14. கண்ணதாசா வருகவே

கவிமழை பொழியும் கவிஞனே
களிக்கும் தண்மனம் பொங்கவே
புவிமழை பொழியும் பருவத்தில்
பொற்றமிழ் பாடிட வருகுவாய்
தவித்திடும் உன்றமிழ் சுவைத்திட
தமிழரும் கூடிவண் இருகரம்
குவிநல் வணக்கம் செலுத்தியே
வருக வருகவே என்கிறோம்.

இந்தநல் நூற்று ஆண்டிலே
இனிய பாக்களைப் புனைந்துமே
சிந்தை முற்றும் கவர்ந்தவன்
சினிமாப் புகழைச் சேர்ந்தவன்
விந்தை மாந்தரின் வாழ்வினை
வியக்கும் கவிதையால் யார்த்தவன்
நிந்தை வாழ்வினில் முகிழ்த்தவன்
நீள்புகழ் கவிஞ வருகவே !

பண்பினில் குன்றாய் உயர்ந்தவன்
பழகும் உறவுக் கினியவன்
அன்பில் தமிழா யானவன்
அறிவில் அனுபவம் மிகுந்தவன்
கண்ணனைக் கடவுளாய்க் கொண்டவன்
காவியம் பாடிய வல்லவன்
கண்ணில் கவிஒளி மிளிர்ந்திடும்
கண்ணதாசனே வருகவே !

கண்ணில் படாத அழகுகள்
 கவிதையில் பாடாக் கருத்துக்கள்
இன்னுமிருப்பது ஐயமே
 இவன்பண் அடிமை கொள்ளுமே
கன்னின் மயக்கம் தருபவன்
 காதல் எல்லை தொட்டவன்
பெண்ணைப் போற்றி வாழ்பவன்
 பார்புகழ் புலவோய் வருகவே !

சிற்றூர் போர்ட்டிக் சன்தனில்
 சுவாபெத் தோங்கெனும் தோட்டமே
சுற்றம் சூழவே கூடியும்
 சுவைமிகு உன்சொல் விருந்தினை
முற்றல் கரும்பென சுவைத்திட
 முன்பாய் காத்திடும் வேளையில்
சொற்பெருக் காற்றி விருந்திட
 செந்தமிழ்ப் பாவலாய், வருகவே !

(போர்டிக்சன், சுவா பெத்தோங் தோட்டத்தில் கவிஞர் கண்ணதாசன் வருகையின்போது பாடப்பட்ட வரவேற்புப்பா.)



15. கவிதைப் பூக்கள் பூக்குமோ !

பிறப்பாரும் இறப்பாரே ஒருநா ளென்று
புவியோர்க்கு கடவுளிட்ட விதியே ஒன்று
இறப்பாரும் இறவாத புகழைக் கொண்டு
இப்புவியில் ஒருசிலரே வாழ்வாருண்டு
சிறப்பாக எழுத்துப்பணி தன்னை வென்று
செந்தமிழர் மனம்வாழும் புலவருண்டு.
நிறைவான அத்தொண்டு புரிந்த வன்தான்
நற்றமிழர் போற்றிவரும் கண்ணதாசன்.

திரைப்படத்தில் பாக்களிலே புதுமை கண்டான்
தத்துவத்தை முத்தெனவே பாடி வென்றான்
பொருளறிந்து படித்தறியா இலக்கியத்தை
பாமரரும் சுவைத்திடவே பாட்டில் கண்டான்
அறிவறியா பட்டிதொட்டி மக்க ளெல்லாம்
அன்னவனின் பாடல்வழி அறிவு கொண்டார்
கருத்தாழ மிக்கஅவன் பாடல் தன்னில்
கன்னித்தமிழ் சுவைகூடி போனதையா !

எட்டாவது எட்டியதோ அவன்படிப்பு
எவர்தொடுவார் செந்தமிழில் கவிப டைப்பு
பட்டதுயர் பட்டறிவாய் வெளிக்கி ளம்ப
பாட்டினிலே படைத்திட்டான் விழிபி துங்க
விட்டகுறை தொட்டகுறை முன்ப டைத்தோர்
விட்டிடாமல் முற்றுமிவன் பாடி விட்டான்
கட்டுக்கு அடங்காத கவிதை வெள்ளம்
கனிச்சாறு மிக்கஅவன் தமிழே வெல்லும்.

இளம்வயதில் பீரிட்டெழும் காத லூற்று
இவன்கவிதை இன்னிசைக்கும் தென்றல் காற்று
களங்காணும் காதலெல்லை தொட்டதாரு?
கண்ணதாசா உனையன்றி வேறு யாரு?
இளங்கன்னி உளந்தன்னை அளந்த தாரு?
இவனன்றி வேறுண்டோ கவிஞர் கூறு
கலைபோற்றும் கவியுலகில் அவனே மன்னன்
கன்னியெனும் கவிதைக்கு காதல் கண்ணன்.

கவியுலகம் போற்றுகின்ற கண்ணதாசா
கன்னித்தமிழ் ஈன்றெடுத்த சொல்லின் செல்வா
தவித்திடுமோ திரையுலகம் உன்னை யன்றி
தமிழ்ப்பாட்டில் இலக்கியத்தைத் தருவா ரின்றி
கவிதையென்று வசனமெல்லாம் கோலை யேச்ச
கவிதைப் பெண் உனையெண்ணி வாடு கின்றாள்
புவிமணக்கும் உன்னழகு கவிதைப் பூக்கள்
பூத்திடுமோ புன்சிரிப்பாய் இனியு மென்றோ !

16. அவனே புலவன்

நெஞ்சினில் உறுதியும் நேர்மையும் திறனுமே
நல்லதோர் கவிஞனின் இலக்கணம்
அஞ்சிக் கஞ்சியே அடிமைத் தனத்தினில்
ஆக்கிடான் கவிதை தினந்தினம்
பஞ்சம் விரட்டினு பட்டினி வாட்டினும்
பாட்டினில் சோரம் போயிடான்
கொஞ்சும் மங்கையின் கெஞ்சும் மொழியினில்
கொஞ்சமும் கொள்கை மாறிடான்.

தலைவ ராகினும் தறிகெட நடந்திடின்
தட்டிக் கேட்கவே அஞ்சிடான்
மலைபோல் வாழ்வும் மடுவாய்த் தாழினும்
மானம் காத்திட துஞ்சிடான்
தளரும் முதுமையிற் தரித்திரம் வதைப்பினும்
தன்கை ஏந்தியே கெஞ்சிடான்
வளமிகு வாழ்வும் வழியவன் அண்டினும்
பழையன மறந்தும் மிஞ்சிடான்

புலவர் திலகமாய் புவியில் திகழ்ந்தோன்
பாரதி வாழ்வினைப் பாரடா !
வளமை களித்திலன் வறுமை குளித்தவன்
வாடியே தில்லையே அறியடா !
கலக்கம் நேரினும் கவலை உளைக்கினும்
கொள்கை மாறிடா கவியடா
செலவு வாழ்விலே சுகமும் காண்கிலை
சிரித்தே வாழ்ந்தவன் புவியடா !

17. நடமாடும் தமிழ்க்கழகம் நமைவிட்டுப் போனதையோ...!

முத்தமிழின் வித்தகனே !
முன்னோர்வழி உதித்தவனே - என்றும்
இத்திரையில் தமிழ்மொழியை
இன்சொல்லால் வளர்த்தவனே !

முத்துக்கள் தொலைந்ததுபோல்
    முத்தமிழ் வாட்டமுற - இன்று
நித்திரையில் நெடும்பயணம்
    நீங்கிளமை சென்றனையோ !

தமிழுலகம் வாடுதையா
    தமிழ் ஓலம் பாடுதையா - சேயை
அமுதூட்டி வளர்த்தமனம்
    அன்னைத் தமிழ் வேகுதையா !

பிணி போக்கும் நல்லூரையும்
    பசிதீர்க்கும் அறிவுரையும் - உம்போல்
இனியங்கு யாருண்டு
    இயம்பிடுவார் கற்கண்டு !

நடமாடும் தமிழ்க்கழகம்
    நமைவிட்டுப் போனதுவோ - இன்று
இடமாறிச் சென்றதனால்
    இதயம்பா ழானதையா

திடமான மனங்கூட
    திசைமாரி வீழ்ந்ததையா !- இருந்த
உடைமையும் இழந்ததாலே
    உன்னினம் தலை சாய்ந்ததையா !

மறுபிறவி உண்டென்பின்
    மறவாமல் பிறப்பெடுப்பீர் - என்றும்
சுரக்கின்ற ஊற்றெனவே
    செந்தமிழில் தேன்வடிப்பீர் !

உறக்கங்கொள் தமிழனம்
உணர்ச்சிப்பிழம் பாக்கிடுவீர் - தமிழ்
இறக்கின்ற பற்றெல்லாம்
எழுச்சிபெற யாக்கிடுவீர்

சிறியோரின் ஆசையிது
நிறைவுதர வருவீரோ - செப்பி
திருந்தாத இனமென்று
வெறுப்பில்மிக மறுப்பீரோ !

அறிவூற்றே தமிழ்த்திருவே
அழுதழுது வேண்டுகிறேன் - மீண்டும்
பிறப்பெடுத்து வருவீரோ
புத்துலகச் சிற்பியென !

இறைவா...!

18. நால்வர் சொல்லால் இறைவனைத் துதிப்போம்

பிள்ளைப் பிராயத்தில் பார்வதி தேவியின்
ஞானப்பால் உண்டவரே - அரவம்
இல்லாளின் துணைவனை தீண்டியதைக் காத்த
திருஞான சம்பந்தரே.

மந்திரமாவது என்று திருநீற்று
மாண்பினைப் போற்றினாரே - அந்த
மந்திர மகிமையைப் பாண்டியன் உடம்பில்
பூசிநோய் போக்கினாரே.

மூத்தவாள் சக்தியால் சூலைநோய் கண்டுமே
திருந்திய அப்பராமே - தேவார
தோத்திரம் பாடியே பெருமானும் சூடிய
திருநாவுக கரசராமே.

கற்றுணைப் பூட்டியே கடலினில் மாட்டியும்
கலங்கிடா நாயனாரே - அந்த
சொற்றுணை வேதியன் சொல்லறம் பாடியே
கட்டினை மீண்டவரே.

வழக்கென்று கூறியே மணப்பந்தல் நாடியே
வந்தார் மாயவனே - அதன்
விளக்கத்தைத் தேடியே வேதியர் பின் ஓடியே
வணங்கிய சுந்தரரே !

சிவனாரின் பக்தியால் பொருள்தன்னை அறமிட்டு
சிறைபட்ட மாணிக்கரே - அந்த
சிவனாரே நரிகளை பரிகளாய் அனுப்பியே
சுடுமணல் பட்டவரே.

உடைபட்ட அணைதன்னை அடைக்கவே ஆண்டவன்
வந்தியின் கூலியானான் - சோர்ந்து
தடைபட்ட ஓட்டையால் அடிபட்ட இறைவனும்
அனைவர்க்கும் கூலிதந்தான்.

மன்னவன் கொடுமையால் மாணிக்க வாசரும்
சிவப்பேறு பெற்றாரே - தெய்வ
அன்பு பெருக்கால்திரு வாசகம் பாடியே
அவனுள்ளம் கொண்டாரே.

திருமுறை எட்டையும் நிறைவோடு பாடியே
சமயக் குரவர்களே - நால்வர்
திருஞான சம்பந்தர் மாணிக்க வாசகர்
அப்பரும் சுந்தரரே !

இன்பத் தமிழாலே நால்வரின் சொல்லாலே
இறைவனைத் துதிப்போமே - என்றும்
இந்து சமயத்தின் உண்மை நெறிதன்னை
போற்றி நடப்போமே !

(கிள்ளான் நால்வர் விழாவில் பரிசு பெற்ற கவிதை)

19. அவன்...!

அவனில்லை என்றொரு
பொருளு முண்டோ - உலகில்
அவனிட்ட முத்திரையும்
குறைவ துண்டோ !
அவனொரு உற்பத்தி
வணிகனன்றோ !- எங்கும்
அவன் படைத்த பொருளுக்கு
எல்லை யுண்டோ !

அவனியே அவன்தன்
ஆக்கந்த தானே - என்றும்
அவனன்றி அணுவேதும்
அசைவ துண்டோ !
அவனவன் செயலெதுவும்
அவனே தானே !- தவறாது
அவனையே மனமெண்ணில்
ஆகாதுண்டோ !

நன்னாள்

20. பொங்கல் வருகவே !

மங்கிய வாழ்வும் தங்கி வளமும்
பொங்கி எழுகவே !
மந்த நிலைமையும் இந்த நாட்டினில்
மீண்டு வருகவே !
எங்கும் மக்களின் ஒற்றுமை உணர்வுகள்
ஓங்கி வளர்கவே !
எங்கள் தமிழரும் ஏற்ற மடைந்திட
பொங்கல் வருகவே !

கன்னியர் மனதில் எண்ணிய எண்ணம்
கனிந்து வெல்கவே !
வன்னுடல் காளையர் வளர்த்திடும் கனவுகள்
வென்று வருகவே !
பண்ணிய பயிரும் மண்ணின் செழிப்பினில்
பொன்னாய் பெருகவே !
பண்பொடு தமிழர் அன்பொடு விருந்திட
பொங்கல் வருகவே !

உழைக்கும் கரங்கள் உயர்வு பெற்றுமே
நிலைத்து வாழ்கவே !
ஊரை ஏய்த்திடும் எத்தர் கூட்டமும்
ஒடுங்கி மாய்கவே !
தழைக்கும் நாட்டினில் பிழைக்கும் மக்களின்
வளப்பபம் பெருகவே !
தண்டமிழ் மொழியும் தரணி போற்றிட
பொங்கல் வருகவே !

21. சித்திரைப்பிறப்பே சீர்வழி காட்டுவாய் !

முத்துபோல் சிரிப்பாய் முல்லைப்பூ விரிப்பாய்
மலர்முக சித்திரை வருகிறாள் - வாழ்வு
நித்தமும் துலங்கிட நன்னிலம் விளங்கிட
நித்திரை கலைந்திட வருகிறாள்
சித்திரைப் பார்வையில் சிந்தனைக் கோர்வை
சித்தி யாகிட வேண்டுமே - நல்
உத்தமி அவள்தம் உன்னத வரவினை
உள்ளமகிழ் வோடுவர வேற்போம் !

புத்தொளி போல புதியநல் லாண்டாய்
சித்திரைப் பூபோல் மலர்கிறாள் - பல
வித்தைகள் புதியதாய் வினைகளும் பெரியதாய்
விளைந்திட நம்மிடம் விழைகிறாள்
புத்தகம் போல புதுவர லாற்றை
புரட்டியே பார்த்திட நினைக்கிறாள்-அரிக்கும்
சொத்தை மனங்களை புதைத்துநல் லெண்ணமே
முத்தாய் முகிழ்ந்திட முனைகிறாள்

சீர்பெறும் வாழ்வினை சித்திரம் போலவே
செதுக்கிட சித்திரை யழைக்கிறாள் - இங்கு
யாரெவ ராயினும் சோம்பித் திரிகிற
மனிதனை மணதனில் புதைக்கிறாள்
பாரினில் மலேசியம் புகழினை ஏந்திடும்
பாங்கினை அறிந்திட காட்டுவாள்-அதில்
சோர்ந்திடும் நம்மவர் உரிய பங்கினை
செயல்படு நிலைநினை வூட்டுவாள்

சித்திரைத் தமிழை முத்திரை பதிக்க
இத்தரை மீதுவழி காட்டுவாள் - நன்று
முத்தமிழ் நாட்டினில் முந்தி ஓங்கிட
இத்தமிழ் மக்களுணர் வூட்டுவாள்
எத்தனை ஜென்மமும் எம்மவர் ஒற்றுமை
இல்லையென் றேக்கம் போக்குவாள் - ஈண்டு
சித்திரை பிறப்பே! செந்தமிழ் ஆண்டே !
செப்பிய செயல்நல் லாக்குவாய் !

22. உழைப்பினை உணர்த்திடும் மே தினம் ஒன்றுதான் !

உழைப்போரின் உழைப்பிலே உண்போரின் பிழைப்புத்தான்
உள்ளதென் றுண்மையை ஓதுவோம் - இந்த
உழைப்போரின் கூட்டமே ஓடாகிப் போய்விடின்
உய்யவே உயிரில்லை உணருவோம்.

மழைகூட மறக்கலாம் மண்கூட மறுக்கலாம்
மனிதனின் உழைப்புத்தான் ஓயுமா - இந்த
வளங்கூட்டும் உழைப்பவர் வாழ்வினை நினைத்திட
வந்திடும் மேதினம் ஒன்றுதான்

உலகத்தின் தேவைக்கு உற்பத்தி பெருகவும்
உழைப்புத்தான் முதன்மையே காரணம் - என்றும்
வளமற்ற நிலத்தினில் நிலங்குறை நாட்டினில்
உழைப்புத்தான் உயர்வுக்குத் தோரணம்

உழைக்கின்ற மக்களாய் ஒரு நாடு பெற்றிடின்
உயர்வது அந்நாடு திண்ணமே - இந்த
உழைப்பாளர் பெருகிட உழைப்பினை மதித்திட
போற்றுவோம் மேதினந் தன்னையே !

எறும்பினைப் போலவே ஜப்பானிய மக்களும்
எவ்வாறு உழைத்துமே உயர்கிறார் - அவர்
கரும்பினைப் போலவே விரும்பிய உழைப்பினை
கருமமாய் நினைப்பதால் உயர்கிறார்

வரும்படி வீட்டிலும் பெரும்பொருள் நாட்டிலும்
பெருகிட உழைப்பவர் கையிலே - இதை
அறிந்திடும் மக்களாய் ஆக்கிடும் தன்மையை
அரியதோர் மேதினம் ஒன்றுதான் !

சோம்பலை அணைத்தவர் தூங்கியே வீழுவார்
சரித்திரம் பாடத்தை புகட்டிடும் - இந்தச்
சோம்பரின் பெருமையை கொண்டிடும் நாட்டினில்
சோகந்தான் சரித்திரம் காட்டிடும்.

சோம்பலும் 'டாடா'வும் சோதரர் அனையரே
சொர்க்கத்தைக் காட்டியே வீழ்த்திடும் - தெளிந்து
காம்பிலே சோம்பலை கிள்ளியே, உழைப்பினை
போற்றுவோம் மேதினம் ஒன்றிலே!

23. மே ஒன்றே ! உழைப்பாளர் நாளின்றே !

மேதினியில் மேன்மைதரும் மே ஒன்று
　　மாநிலமே நினைவுகூறும் தினமின்று
வேதனைகள் தீர்ந்துவிடும் நலங்கொண்டு
　　உழைப்பாளர் மகிழ்கூடும் நாளின்று
சாதனைகள் புரிந்தோர்க்கு நற்சான்று
　　சாற்றுகின்ற பொன்னான நாளின்று
சாதிமதம் மொழியினமும் பேதமின்றி
　　சகலரும் போற்றும்நல் நாளின்று.

கிழக்கினிலே எழுந்தருளும் ஞாயிறுபோல்
　　காலைமலர் விழுந்தெழும்தொழி லாளர்தம்
உழைப்பினிலே பரிதியைப்போல் ஓய்வதில்லை
　　வான்மறையும் வேளைவரை களைப்பதில்லை
உழைக்கின்றோம் பிழைப்புக்கு என்பதிலே
　　உயர்வுக்கு வழிகாணும் முடிவினிலே
உழைப்பாலே செழிக்கும்இவ் வுலகென்றே
　　உணர்த்திடவே கொண்டாடும் மே ஒன்றே.

தொழில்காணும் நிலைமாறும் மலைநாட்டில்
　　தழைத்தோங்க வழிகண்டு சிறந்தோங்கும்
இலையென்ற சொல்லுக்கு இடமின்றி
　　இமயத்தை எதிர்கண்டு நடைபோடும்
உழைப்பாலே இதுவன்றோ கைகூடும்
　　உயர்வுக்கு அதுதானே வழிகோலும்
சலிக்காமல் உழைக்கும்நல் வர்க்கம்தான்
　　சந்திக்கும் நந்நாளே மே ஒன்று !

செய்கின்ற எத்தொழிலும் உழைப்புத்தான்
செவ்வனேமிக அதுமுடிப்பின் சிறப்புத்தான்
வையத்தில் மாந்தரெல்லாம் வாழ்வதற்கு
வருமானம் தேடும்வழி உழைப்புத்தான்
பொய்யின்றி களவின்றி தேடும்தொழில்
பூவுலகம் போற்றுகின்ற உழைப்புத்தான்
மெய்யிதுவே மேன்மைதரும் உழைப்பிதுவே
மேமாதம் நினைவுகொளும் நாளிதுவே!

24. மேதினம் கொண்டாடுவோம்

ஒன்றென நன்றென
உள்ளம் மகிழென
இன்று நாம் கொண்டாடுவோம் - மேதினம்
இனியநல் பண்பாடுவோம்

விண்ணையும் மண்ணையும்
உழைப்பினில் வென்றிட
கண்ணெனக் கொண்டாடுவோம் - மேதினம்
களிப்புடன் தென்பாடுவோம்.

எளியவர் வலியவர்
இனமென மொழியென
பிளவுகள் மறந்தாடுவோம் - மேதினம்
புவிதனில் உறவாடுவோம்

அன்பொடு பண்பொடு
அனைவரும் கூடியே
இன்பமாய் சேர்ந்தாடுவோம் - மேதினம்
எழுச்சிக் கூத்தாடுவோம்.

. .

25. உழைப்பாளர் தினம்

உழைப்பாளர் உலகெங்கும் இருப்பதாலே
உலகத்தின் உயர்வுக்கு உழைப்பதாலே
உழைப்பினையே உல்கெங்கும் மதிக்க வேண்டி
உழைக்கின்ற தொழிலாளர் போற்ற வேண்டி
உலகில்நிற மொழிநாடு பேத மின்றி
ஒன்றாகக் கொண்டாடும் ஒரே நாளாம்
தொழிலாளர் தினமான மே தினத்தில்
துன்பங்கள் மாய்கவென சொல்வோம் வாரீர்!

ஏற்றம்

26. உயர்வு திண்ணம்

காலம் இளமை சக்தியை
கட்டிக் காத்து நிற்குமோ!
நாளும் போட்டி வாழ்க்கையில்
நாளை வாய்ப்புக் கிட்டுமோ!
சோலை வாழ்வு வேண்டிடின
சோம்பல் கொண்டால் அண்டுமோ!
வேளை நம்மை நாடியே
விரைந்து உதவி புரியுமோ!

வளமாய் வாழ்வு காணவே!
வறுமை விலகி ஓடவே!
இளமை சக்தி தன்னையே
இன்றே பயன்படுத்துவாய்!
நலமாய் நற்செயல் புரிகுவாய்!
நன்மை பெற்று உயருவாய்!
இலதே இயலா தென்பதை
இனியும் இல்லா தாக்குவாய்!

வலிமை யுள்ள வரையிலே
உலகம் உனது கையிலே!
இளமை வருவ தொருமுறை
இருக்கும் காலம் வரையறை
உழைப்பில் இளமை சக்தியை
ஒன்றாய்க் கலக்கச் செய்திடில்
விளைவு உமது பக்கமே
உயர்வு திண்ணம் திண்ணமே!

27. உழைப்பே உயர்வு

வெற்றி என்பது வெறும் பேச் சல்ல
உழைப்பு ஒன்றே வெல்லும்
கற்றறி வின்றேல் கடும் உழைப்பின்றேல்
கவலை வாழ்வில் மிஞ்சும்

பெற்றவர் சேர்த்து பிள்ளைகள் சுவைக்க
பிழைப்பின் அருமை போகும்
வற்றிய பின்னே வறிநிலை யெய்தின்
வாழறி யாது வாடும்.

சோம்பிக் கிடந்து சுருண்டு உறங்கி
சுகத்தை யடைந்தவ வரில்லை
வீம்புபேசி வினையை மறந்து
வென்று வாழ்ந்தவ ரில்லை.

ஓம்பும் வாழ்வு உயர்த்தும் போக்கு
உள்ளந்த தன்னில் தேக்கு
சூம்பிய வாழ்வாய் தேம்பி வருந்தும்
சோக நிலையை நீக்கு

வாழ்வில் சிறந்தோர் வாழ்க்கை யறிந்தால்
உண்மை நிலையும் புரியும்
தோல்வி கண்டும் துவளா உழைப்பில்
தொடர்ந்தால் வெற்றி தெரியும்.

ஏழ்மை நிலையில் உழன்றோர் சரிதம்
இதனை நன்றே கூறும்
வாழ்வி லுயர உயரிய எண்ணம்
வளமாய்க் கொள்ள வேண்டும்!

28. தேற்றமடைவீர்

இருபத் தொன்றாம் நூற்றாண்டு நோக்கி
எழுச்சி உலகம் விரையுது
சுறுசுறுப்புடன் கம்பியூட் டருலகம்
செயலில் மாறி வளருது
அறிவு வளர்ச்சி அறிவியல் முதிர்ச்சி
அற்புத கருவிகள் தோன்றுது
இருப்பினும் நம்மவர் நிலையும் ஏனோ
ஏற்றங் காணாது சரியுது.

ஆண்டு மொன்று அடுத்துச் சென்று
அகவை ஏற்றங் காணுது
பாண்ட விலையும் தீண்டுங் கொடிய
பாம்பின் விஷமா ஏறுது
வேண்டு முயர்வு சீனர் மலாயர்
வாழ்வில் விரும்பி விளையுது
ஈண்டு வாழும் தமிழர் வாழ்வில்
இகழ்ச்சி தானே மிஞ்சுது.

மாற்றம் நம்முன் னேற்றங் காண
மேனிலைக் கல்வி தேறணும்
ஆற்றல் அறிவில் ஏற்றத் தொழிலும்
அறிந்து ஏற்றங் காணனும்
தூற்றும் சோம்பல் துரத்தி வணிகத்
துறையில் துணிவா யிரங்கனும்
தேற்ற மடைவீர், தீப நாளில்
தமிழா உறுதி பூண்டுமே!

29. தொழிலொன்றைக் கைக்கொள்க

தோட்டமதில் வருங்காலம் நமக்கில்லை
தொடர்ந்துமினி வாழ்வதிலும் பயனுமில்லை
வாட்டமிக நம்மினத்தார் போக்குதற்கு
வெளிப்படுவீர் நகரமதில் தொழில்காண
கூட்டாகத் தொழிலொன்றைத் தொடங்கிடுவீர்
குடும்பத்தில் ஒன்றிணைந்து முனைந்திடுவீர்
பாட்டாளி வர்க்கமெனும் பெயர்விடுத்து
பாடுபட்டு தொழிலாளும் நிலைபெறுவீர்.

மனதினிலே துணிவிருப்பின் மார்க்கமுண்டு
மாற்றினத்தார் முன்னேறும் வழிகண்டு
பணம்பொருளும் சொத்துடைமை வருங்காலம்
பெற்றவரே இந்நாட்டில் சிறப்படைவார்
வினையென்றும் விதியென்றும் நம்பிருப்பின்
வீதியோரம் இரப்பவராய் குந்திருப்போம்
வனத்தில்நறு மணம் வீசும் நன்மலராய்
வாழ்வுபெற தொழிலொன்றே வழிகோலும்.

கைத்தொழிலைக் கருத்தாய்மிகக் கற்றுவிடின்
கவலையிலை எனவென்று சான்றோரும்
வகையாகச் செப்பிருந்தும் நம்மவர்கள்
வழிதவறி விளையாட்டாய்ச் சோம்பிருந்து
அகமகிழ கவைக்குதவா கதையுரைத்து
அவலநிலை கொண்டாரின் னாள்வரையில்
வகையாக மாற்றினாத்தார் கைக்கொண்டு
வளர்பிறையாய் முன்னேறி வாழுகின்றார்.

தமிழர் தம் வாழ்வுதனைச் சிதைக்கின்ற
தமிழ்ச்சினிமா கட்டோடு விட்டொழிக
அமிழ்தத்தில் நஞ்சூட்டிக் கெடுக்கின்ற
அசிங்கத்தைச் சினிமாவில் காட்டுகின்றார்
உமிழ்கின்ற எச்சிலையாம் வன்முறையும்
உள்ளத்தில் முற்றாக விட்டொழிக
கமழ்கின்ற வாழ்வுதரும் தொழில்தன்னில்
உழைப்பாலே முன்னேற கைக்கொள்க.

அன்னையே ...!
பெண்டிரே ...!

30. அழகே அழகு ...!

முன்னாலே மேலழகு
பின்னாலே கீழழகு
பெண்ணாக வந்ததொரு அழகு - என்னை
பித்தாகிப் போனதந்த அழகு

பாளையென வெடித்ததுவும்
பாலாகிப் பொங்கினதும்
ஆளாகிப் போனதந்த அழகு - மனதை
அள்ளியேச் சென்றதந்த அழகு

பளபளப்பு மேனியென
பளிங்குபோல் மின்னலிட
வழவழப்பு தொடையிரண்டின் அழகு - ஐயகோ
வாட்டியெனை எடுத்துவிடும் இரவு

நூலாகிப் போனஇடை
நோவாத அன்னநடை
தாளாத தளதளக்கும் அழகு - கண்டு
தவித்துமனம் உருகிடுமே மெழுகு

கள்ளூறும் இதழிரண்டு
கண்கள்தரும் போதை கொண்டு
சொல்லாமல் சுண்டுமுக அழகு - அவை
சொர்க்கத்தைத் திறந்துவிடும் கதவு

தோளிரண்டும் கனகனக்க
தொங்குமிள நீரிரண்டும்
நாளெல்லாம் தாகந்தீர் அழகு - அதன்
நாச்சுவையும் ஒப்பிடுமோ அமுது.

31. இல்லம் விட்டு ஓடாதீர்!

நங்கைகளே, தங்கைகளே! நன்று கேளீர்
நாணமச்சம் மடம்பயிர்ப்பு நான்கு சொன்னார்
உங்களுக்கோ சுதந்திரமே வேண்டு மென்றீர்
உள்ளவற்றை ஒதுக்கிப்பின் வெளியில் வந்தீர்
அங்கமதை காதலிக்கும் ஆண்மை கண்டீர்
அனைத்துசுகம் பெற்றபின் அவரைக் காணீர்
சிங்கத்தின் குகைதன்னில் சிக்கிக் கொண்டீர்
சிந்தனைக்கு அப்போது வேலை தந்தீர்

காலஞ்செய் பின்னாலே கண்விழித்து
கற்பென்னும் உயிர்மானம் பறிகொடுத்து
ஞாலத்தில் அதன்பின்பு உங்கள் வாழ்வு
நாயினிலும் கடையாக நலிந்து போனீர்
ஏழையென வாழ்ந்தாலும் எத்த னையோ
இன்னல்கள் உற்றாலும் இல்லம் விட்டு
காளையரின் மயங்குமொழி கேட்டு ஓடின்
காலமுற்றும் கண்ணீரால் மூழ்கி சாவீர்

காதலுக்கு உயிர்தந்த கால முண்டு
காமத்தில் உழல்கின்ற காலமின்று
சோதனைகள் யார்வாழ்வில் வருவதில்லை
சொர்க்கம்நல் மனைதேடி வருவதில்லை
வேதனைக்கு மருந்தாக ஓடிப் போயின்
விதியுன்னை விரட்டிவரும் கன்னிப் பெண்ணே!
சாதனைகள் படைப்பதாக எண்ணிடாதே!
சாக்கடைக்குள் பின்வீழ்ந்து நாறி டாதே!

இளமைக்கு வேகமுண்டு தடையைப் போடு!
        இனிமைக்கு சுகந்தேடும் கட்டிப் போடு!
அளவோடு பழக்கத்தால் துணையைத் தேடு!
        அகந்தன்னில் நிலைத்திருக்கும் காதலோடு!
பிழையேதும் நேராத கவனத் தோடு
        பெண்ணே உன் எதிர்கால வாழ்வைத் தேடு!
விழைகின்ற நிலைபேண சுற்றத் தோடு
        வெற்றியுடன் திருமணத்தை நீயும் நாடு.

32. பெற்ற தாயே தெய்வமடா

பெண்களின் திலகமாம்
        பெற்றவள் அறியடா
கண்ணுக்கு இமைபோல
        காப்பவள் அவளடா
மண்ணுக்குப் பாரமாய்
        மக்களே மாறினும்
எண்ணத்தில் பேதங்கள்
        என்றுமே கொண்டிடாள்

பிள்ளைகள் வெறுப்பினும்
        பெற்றவள் துறந்திடாள்
கள்ளத்தை உள்ளத்தில்
        கடுகளவும் கொண்டிடாள்
சொல்லம்பு வில்லம்பாய்
        பிள்ளைகள் வாட்டினும்
உள்ளத்தில் வலிதாங்கி
        வெளியினில் காட்டிடாள்

எட்டியே உதைக்கின்ற
        எத்தன்மக னாயினும்
கட்டியவன் கைப்பிள்ளை
        விட்டோடி விலகினும்
பட்டமரம் போல் நிலை
        பட்டினியாய் வாட்டினும்
விட்டாவி போகும்வரை
        வளர்ப்பவள் தாயடா

கடவுளை கோயிலில்
        கண்தேடி வணங்கினும்
நடமாடும் தெய்வமாய்
        இல்லத்தில் வலம் வரும்
புடம் போட்ட தங்கமாம்
        பெற்றவள் அறியடா
இடமாறி அலைந்தவள்
        அடிதொழ மறப்பதோ!

33. எங்கோ சென்றாள்

ஐயிரு திங்கள் சுமந்து
        அவனியி லீன்றா ளன்னை
ஐந்திரு வரைஎன் முன்னே
        அழகுற பெற்றா ளென்னை
மெய்யது இன்று சோர
        முதுமையிற் கடங்கி ஒடுங்கி
செய்கையு முற்று மிழந்து
        கட்டிலுக் கடிமை யானாள்.

அள்ளிநன் றணைத்த கரமோ
அசைவுற் றிருக்கும் கோலம்
துள்ளலாய் திரிந்த கால்கள்
துவைத்திட்ட துணியாத் தோற்றம்
சொல்லினை உதிர்த்த செவ்வாய்
செயற்றிற மிழந்த காட்சி
துள்ளுமீன் விழிக ளிரண்டும்
துயிலுறும் இமைமூ டாட்சி

என்னயா னுரைப்பே னம்மா
எழுந்துநீ நடவா யென்றே
என்னுளம் ஆவல் தூண்ட
இறைவனை இறைஞ்சி நின்றேன்!
அன்னையோ விழிக்க மறந்தாள்
அவனியின் நினவைத் துறந்தாள்
இன்றவள் எங்கோ விரைந்தாள்
என்னுயிர் துடிக்க மறைந்தாள்.

பெற்றவள் ஏற்றநல் லின்பம்
பெற்றிடா வாழ்ந்து போனாள்
குற்றமில் குடும்பம் பேணி
குன்றிடை குலவிளக் காகி
உற்றநல் பாசக் தோடு
உழைப்புமே ஈந்து நைந்து
சற்றுமே பயன்கொள் ளாது
சாவினை யணைத்துச் சென்றாள்!

34. பொறுக்குமா மண்ணடா

விந்தை மனிதராய் விவேக மின்றியே
வினைகள் புரிவரே! - சிறிதும்
சிந்தனை யின்றியே சித்தங் கலங்கியே
செயலினை செய்வரே!
நிந்தனை வருமென நெஞ்சினில் அஞ்சலில்
நேயத்தைக் கொல்வரே - வரும்
சொந்தமும் பந்தமும் சுட்டெரித் திட்டுமே
சுயநலம் புகழ்வரே!

பெண்மைப் பூவென புலவர் போற்றியோர்
புன்மைதம் பணிவதோ - பெரும்
அன்பும் பொறுமையும் அவர்க்குறும் சொத்தென
அறிந்தும் துணிவதோ!
பெண்ணது கொடுமையை பெண்ணே புரிவது
பாவமேல் பாவமே - அந்தப்
பெண்ணவள் தாய்மை பேறு பெறுவதை
பறித்திடல் நியாயமே!

அடைக்கலம் தேடியே அண்டிய உறவினை
அடைத்து உதைப்பதோ - அவர்
உடலினைக் கீறியும் காயங்கள் விளைத்தும்
உயிரினை வதைப்பதோ!
சுடுநீர் ஊற்றியும் சுட்டு பொசுக்கலும்
செய்கையோ பெண்ணடா - இரும்பு
பிடுங்கும் குறடினால் கதையினை இழுப்பது
பொறுக்குமோ மண்ணடா!

காதகி பெண்ணவள் பாதகி யானவள்
கருமப் படைப்படா - உலகில்
வேதமும் பொய்த்திட வினைகளும் வென்றிடும்
அரக்கத் தனமடா!
பேதமு மில்லையே பெண்ணவள் இதயமே
பாறைக் கல்லடா - அவள்
பூத மெய்யினில் புகுசெந் நீருமே
புற்றுச் செல்லடா!

இந்நூற் றாண்டில் இத்தகு செயலும்
ஏற்பட விடுவதோ - ஏற்பின்
மந்தை மந்தையாய் மனித மிருகங்கள்
மலிந்து போகுமோ!
குந்தகம் விளைக்கும் கெடுமதி யாளரை
குட்டி யடக்குவீர் - இனி
எந்த மனிதரும் இவை துணி யாது
பாடம் புகட்டுவீர்!

(உறவினப் பெண் தன்னிடம் விடப்பட்ட ஒரு குழந்தையை சித்திரவரை செய்தாள் என்னும் நாளிதழ் செய்தியை அறிந்து எழுதப்பட்ட கவிதை)

35. அன்னையென்ற பெருமையை பெற்றிடு!

பெற்றெடுத்த அன்னைக்கு
        பிள்ளை ஒரு பாரமா!
ஒற்றிக்கொண்ட இன்பத்தில்
        ஊறிக்கெட்ட பாவமா!
குற்றமென அறிந்துமே
        கூடுவது நியாயமா!
முற்றிவிட்ட நிலையிலே
        முடித்துவிட எண்ணமா!

குப்பைமேடு பிள்ளைக்கு
        குடியிருக்கும் இல்லமா!
தப்புஎன தெரிந்துமே
        தூக்கெறிய லாகுமா!
தப்பியது உயிர்பிழைப்பின்
        தரணிநல் வாழுமா!
அப்பன்தன் பேரின்றி
        அல்லல்பட வேண்டுமா!

கண்டவுடன் மனமிழப்பின்
        காதலென்ற அர்த்தமா!
கன்னியர்தம் கற்புநெறி
        கடைச்சரக்கு ஆகுமா!
பெண்மைதனை இழப்பதிலே
        பெருமையென்ற எண்ணமா!
நன்மைதீமை அறிந்திடாத
        நாகரீக மோகமா!

பெண்களின்தன் பெரும்பேறு
பெண்மையென அறிந்திடு!
நன்மணத்தின் ஆண்மைசேரும்
நெறிமுறையைத் தெரிந்திடு!
அன்னையெனும் பெருமைதனை
முறைவழியே பெற்றிடு!
கண்ணைப்போல பிள்ளைதனை
காத்துஉயர் கொண்டிடு!

36. முதல் மனைவி

பெண்ணென்னும் பிறப்பாலே புவிதன்னில் எந்நாளும்
புண்ணாகும் வாழ்வே கிட்டும்
பெண்மைதனைப் பேருயிராய் போற்றியே காத்தாலும்
திருமணத்தின் பின்னும் வாடும்
எண்ணமுறும் இல்வாழ்வு இனிமையுட னமையாது
எதிர்மறையாய் விளைவுதா னளிக்கும்
இன்கணவன் வண்டாகி எங்கெங்கும் கண்பாய
ஏந்திழையின் மனமே தவிக்கும்

பெற்றோரும் நாள்பார்த்து பொருத்தங்கள் சரிபார்த்து
பெண்யானே பதிகை பிடித்தேன்
பெற்றமகிழ் பிள்ளையொடு போதுமென இருந்தக்கால்
புகைச்சலுடன் வாழ்வுவர இடிந்தேன்.
உற்றவன்தன் பற்சுவையில் ஊர்மேயப் போனானே.
ஊசிப்போ னவள்என் றென்னை
உற்றாரும் பெற்றாரும் உரைத்தும்கே ளாமல்வே
றொருத்திக்குத் தந்தானே தன்னை.

இல்லத்து அரசியெனை இடும்ஏவல் செயவைத்து
இளமங்கை யோடு களித்தான்
உள்ளின்ப நினைவில்யான் உற்றவன்பால் சென்றாலும்
உதைத்தென்னைத் தள்ளிப் பழித்தான்
பிள்ளைபல பெற்றதனால் பொன்மேனி தளர்ந்ததனால்
போதூர மென்றே சொன்னான்
நல்லிளமை யோடிருக்க நாளெல்லாம் எனைச்சுற்றி
நங்கைதுகில் ஒளிந்தான் முன்னாள்.

பெண்ணுக்குத் துணையிருக்க போட்டியாய் சக்களத்தி
பங்குபோட வந்தாள் பாவி!
பெண்ணொருத்தி வாழ்வழிக்க பேயாக வந்த அவள்
போவாள்விரை வில்சண் டாளி!
பெண்தாவும் வண்டான பிழைபட்ட கணவனவன்
பழிபட்டு போவான் நரகம்
பெண்கள்படைத் தாண்டவனே பிறப்பில்பழு தாக்கிவிட்டு
க்ாலமெலாம் கொடுத்தான் கலக்கம்.

37. கைம்பெண்ணின் ஏக்கம்!

பருவத்தின் வாசலிலே காத்தி ருந்தேன்
பலபேரும் சந்தையிலே விலைப கர்ந்தார்
பருவத்தின் நெருப்புக்குள் தாகங் கொள்ள
பார்த்தவரும் வடிகட்டி எடையு மிட்டார்.
நிறைகுடமா யில்லையென குறைப் படுத்த
நின்றுதவங் கொண்டிருந்தேன் பருவக் காட்டில்
அரிதாயொரு அருங்குணவான் அன்று வந்தார்
ஆமென்று தலையசைத்துக் கைபிடித்தார்.

கல்யாணச் சந்தையினில் விலையு மாகா
கன்னிக்குழு படுகுழியில் தள்ளப் போமோ!
எல்லையின்றி வாழ்வுதுயர் எய்தப் போமோ!
எனுமச்சந் தனைபோக்கி எனையும் காத்து
சொல்லொண்ணா இன்பத்தின் சுவையு மூட்டி
சொர்க்கத்தை காட்டிவிட்ட எனதுதெய்வம்
சொல்லாமல் ஓர்நாளில் விட்டுச் சென்றார்
சொகுசுக்கார் பயணங்கொள் விபத்து ஒன்றில்

அழுதழுது புரண்டழுது அல்ல லுற்றேன்
ஆறுதல்சொல் கேட்டும்யான் விம்ம லுற்றேன்
விழுதறுந்து போனபின்னம் வாழ்வு மேது
விஷமொன்றே வழியென்றே முடிவெ டுத்தேன்
பிழையெனுமென் போக்கறிந்த பெற்ற வர்கள்
பாவையெனை அணைத்தழுது தடுத்து விட்டார்
விலைபோன சந்தையிலே திரும்பி வந்தேன்
வேகின்ற விரகதாப நெருப்பி லின்று

வெந்தணலில் பட்டபுழு போல்துடிக்க
வரன்மேலும் கிட்டாதோ ஏங்கு கின்றேன்
பந்தியிலே சுவையிலிருந்து படைத்து விட்டு
பாதியிலே உண்ணுகையில் பறித்துச் சென்றார்
தந்தசுவை விட்டகுறை தொட்ட குறையாய்
தகிக்கின்ற தாபத்தால் வாடு கின்றேன்
அந்தச் சுவை அறியாமல் இருந்தி ருப்பின்
அமைதியினில் கன்னிவாழ்வு தொடர்ந்தி ருப்பேன்.

38. பாவம் புரிவதை நிறுத்திவிடு

பிள்ளையை ஈன்று விட்டாலே - பெற்றோர்
பெருங்கடன் முற்றும் தீர்ந்திடுமோ
அள்ளி யணைத்து அன்போடு - வளர்க்கும்
அரும்பணி அவரிடம் உண்டன்றோ.
அல்லும் பகலும் பிள்ளைக்கு - உழைப்பில்
ஆதரவு காட்டிட வேண்டாமோ
பள்ளிப் பருவம் எய்துவிடின் - கல்வி
பயில அனுப்பிடல் கடனன்றோ

வேலையும் பொருளும் இன்றியே - பெற்றோர்
விழைந்து பிள்ளை பெறலாமோ
கால இளமை வேகத்தில் - கூடி
குழந்தை சுமையாய் பெறலாமோ
ஆளைக் கொள்ளும் ''டாடா''வை - அருந்தும்
அற்பரும் சிசுவை நினைப்பதுவோ
நாளும் மதுவில் குளிப்போரும் - பிள்ளை
நாட்டம் கொள்ளல் முறைதாமோ

சேயினைக் கொடுமை செய்பவரே - உலகில்
பேயினும் மிகமிகக் கொடியவரே
தாயெனும் பெண்ணவள் செய்துவிடின் - பூமா
தேவியும் பொறுத்திடமாட்டாளே
வாயிலா ஜீவனும் தன்சேயை - அணைத்து
வளர்க்கும் தன்மையை மறந்தீரா
நாயினும் கேடா பிறப்பினிலே - அதன்
நேசத்தை விடவா கடையவரே !

பால்வடி முகத்தை பார்த்திடுவீர் - அந்தப்
பச்சை மண்ணை நோக்கிடுவீர்
காலது நெஞ்சினில் பட்டாலே - உள்ளம்
களித்திடும் இன்பம் சொல்லுண்டோ
வாழ்நாள் அதற்கே வாழ்த்திடலாம் - அதன்
மழலை மொழியினில் மகிழ்ந்திடலாம்
பாழ்பட அதனை வதைப்பதுவோ - மனிதா
பாவம் புரிவதை நிறுத்திடடா

அன்னைக் கொப்பாம் டத்தின்ஸ்ரீ - திலகம்
இந்தி ராணியின் அன்பினுக்கே
பெண்ணின் குலமே தலைவணங்கும் - அவரின்
பால சுந்தர நிதிசேர்ப்பில்
கண்போல் சிசுவைப் பேணிடவே - அவர்தம்
காட்டிய வழியில் துணைநிற்பீர்
இன்னும் இதுபோல் கொடுஞ்செயலும் - நாட்டில்
எழாது அறவே தடுத்திடுவீர்.

39. பெண்ணே உம் பெருவாழ்வு ஒரு முறைதானா?

உண்பதற்கும் உடுப்பதற்கும்
உருப்படியாய் வழியேது
என்றுதானே இந்நாட்டில்
இறக்குமதி யாகின்றார்
மன்மதனென் றமிழ்ப்பெண்கள்
மயக்கங்கொள் மணமுடிக்கும்
அன்னியராம் வங்காளத்து
ஆண்மகனை அறிவிழந்து......!

நிரந்தரமாய் அவரிருக்க
நம்நாட்டு சட்டமிடம்
தராதென்றும் உண்மைநிலை
தையல்அறி யாததேனோ!
இருக்கும்வரை இன்பசுகம்
மாந்திடுவோம் என்னுமவர்
முறைகெட்ட காமத்திற்கு
முந்தானை விரிப்பதுவோ!

கற்புநெறி உயிரெனவே
கற்பித்தார் சான்றோர்கள்
விற்கின்றார் இன்றையபெண்
சந்தைகாய் கறியெனவே!
பொற்புடைய கணவனையும்
பெற்றெடுத்த பிள்ளைகளையும்
அற்றபசுக இன்பத்திற்
கலையவிட் டோடுவதோ!

மின்னுவதை பொன்னென்று
வங்காளத்து காமுகனை
கண்ணழகு கணவனாக
கருத்தழிந்து வரிந்துகொளும்
கன்னியரும் பின்னாளில்
கற்பழிந்து பிள்ளைபெற்று
தன்னந்தனி நடுத்தெருவில்
தவித்திடுங்கீழ் நிலையறிவீர்!

பெண்மையோடு குடும்பமானம்
பறிபோன அவலத்தில்
என்னவழி யென்றறியா
ஏமாந்த இளமங்கை
பெண்மைவிலை போகுமிடம்
புகலிடமாய் அவள்பெறுவாள்
பெண்ணேஉம் பெருவாழ்வு
ஒருமுறைதான் நீயறிவாய்.....!

40. உயிராய்ப் போன உயிரே

பட்டுப் புடவை கட்டி
பாலைக் கையிலேந்தி
சிட்டுப் போல வந்து
செவ்வாய் நகையைச் சிந்தி
மொட்டு இதழும் விரிய
முதலாம் இரவு தன்னில்
கட்டி யணைத்த கண்ணே
கண்கள் தேடு தின்றே!

உங்கள் உறவு கொண்டு
உரிமை நமக்கு ஒன்று
திங்கள் முகத்துக் கொப்ப
தமிழின் மகவைத் தருவேன்
தங்கம் அன்று சொன்னாய்
தைய லின்று என்னை
பொங்கும் கடலாய் விட்டு
போன தெங்கு மானே!

நமது உறவின் சின்னம்
　　நலமாய் வயிற்றில் தாங்கி
உமது சொந்தங் காண
　　ஓர்நாள் காரில் போந்தாய்
எமனும் உனக்குத் துணையாய்
　　ஏறி கார்வந் தானோ
சமயம் பார்த்து விபத்தில்
　　சிக்க உனைவைத் தானே!

உயிராய்ப் போன உயிரே
　　உடலாய் வந்தா யின்றே
உயிரே போன பின்னே
　　உடலாய் ஆனேன் நானே
கயிறு அறுந்த பட்டம்
　　காற்றில் ஆடல் போல
உயிரே எங்கு போனாய்
　　ஓருயிர் தவிக்க வைத்தே!

சிந்தனைக் கனல்

41. சிந்தனை செய் தமிழா

இரக்கமுள்ளது போல் - தமிழா
எழுச்சி இல்லையடா
கிறக்கம் கொண்டுமிக - வீண்
உறக்கம் கொள்ளுவதா
சிறக்கத் தெரியவில்லை - உன்
சிறப்புத் தெரியவில்லை
பிறரை நம்பியதுபோல் - உன்
பிறப்பை நம்பவில்லை

மாற்றான் காலடியில் - உன்
மகிமை மாளுதடா
வெற்று கவர்ச்சினுக்கே - நீ
வீழ்ந்து தாழுவதா
பற்றுப் பாசத்தினை - கேவலம்
பணத்திற் கொல்லுவதா
விற்று மானத்தினை - உன்
உயர்வை நாடுவதா

வாழை யடிவாழை - உன்
வம்சம் தவறுதடா
ஏழை சமுதாயம் - என்றே
இழிவாய்ப் போகுதடா
நாளை உலகினையே - சற்றும்
நினைப்பில் இல்லையடா
வாழும் வழிமுறையை - இன்னும்
வகுக்க அறியலடா

குடித்தனம் உயர்த்துவென்றால் - உன்
குடிதனை உயர்த்துவதா
படிப்பை பற்றுவென்றால் - வெறி
அடிதடி போற்றதவதா
விடியலை காணுயென்றால் - உறவுக்கு
வெடியினை வைப்பதுவா
துடிப்பில் நல்வழியை - என்று
திருப்பி நீயுயர்வாய்

சிந்தனை செய்தமிழா - வாழ்வு
செம்மை யாக்கிடவே
குந்தகம் விளைவிக்கும் - தீய
குறுமதி கொன்றிடுவாய்
சொந்த உழைப்பினிலே - உனது
செயலினில் திறம்பெறவாய்
மந்திர மாயமில்லை - உழைப்பே
முற்றும் உயரவைக்கும்.

42. என்றிவர் ஏற்றங் கொள்வார்?

பலவழி கடந்தார்
    படுகுழி வீழ்ந்தார்!
நலமொரு வழியை
    நாடியே சென்றோர்
நிலமிகு இசையில்
    நீடுயிர் வாழ்வார்!
உலகினில் இஃதே
    உரைநல் பாடம்

தமிழர் வாழ்வில்
 தாழ்வே மிஞ்சிடும்
அமைதி யாமவர்
 ஆழ்ந்து நோக்கின்
இமிழ்தாய்த் தமிழரில்
 இலையே ஒற்றுமை
உமியாய்ப் பலவாய்
 உடைந்து போனார்.

தொகையில் சிறியோர்
 பிரிவில் பெரியோர்
வகைபல மதமும்
 வசதிக் கொள்வார்!
தொகைபல சாதி
 மிகையாய்க் காண்பார்
நகைக்கும் மடமை
 நலங்கெட விழைவார்

நன்னெறி போற்றி
 நாநிலம் நாட்டி
பண்பினை வளர்த்து
 பிறர் வழி பற்ற
குன்றென உயர்ந்தோர்
 கோபுரம் நிமிர்ந்தோர்
இன்றோ ஏனோ
 இழி நிலை கொண்டார்!

வன்முறைக் கலையால்
வழிமுறை கண்டார்
பெண்ணே தெய்வம்
போற்றிய இனத்தார்
பெண்ணுயிர் கற்பை
பறித்து பிழைத்தார்
மண்ணைத் தாங்கும்
மாதர் பொறுக்காள்

இன்னும் அடிதடி
எத்தனைக் கொலைவெறி
எண்ணி லடங்கா
இழிசெயல் புரிந்து
மண்ணின் தாயும்
வெட்கி நடந்தார்
என்றிவர் திருந்தி
ஏற்றம் கொள்வார்?

43. வெட்கப்பட வேண்டும்

தமிழர்களே யானுமிகு
தலைகுனிந்து வெட்குகிறேன்
உமியெனவே நம்வாழ்வு
உமிழும்நிலை ஆனதையா!

குடியாலே நம்மக்கள்
குணங்கெட்டு போகுவதோ
படித்தவனும் படிதவறி
பண்புவிலை கூறுவதோ!

அன்றொருநாள் சிரம்பானில்
அஞ்சலகம் போகையிலே
குன்றொத்த இளங்காளை
குடிவெறியில் தரையமர்ந்து

ஆசையுடன் வாங்கிவந்த
'மீகோரிங்' பொட்டலத்தை
மீசைமுட்ட தின்கையிலே
வாயில்கூடச் செல்லவில்லை

அள்ளிக்கை எடுக்கையிலே
அரைப்பங்கு கீழேவிழும்
மெல்லவாய் வைக்கயிலே
மூக்கில்சில முட்டிவிழும்

வாயொரு புறமுங்கோண
கையொரு பக்கஞ்செல்ல
சேயினைப் போல்குடியன்
செய்கையோ சிரிக்கவைக்கும்

சிரிக்கின்ற நிலையாயது
நம்மினத்தின் நிலைசந்தி
சிரிக்கவைக்கும் இழிநிலையை
செப்புகின்ற செய்கையன்றோ!

கஷ்டமுடன் உழைத்துபெற்ற
காசினையே செலவழித்து
இஷ்டப்பட்டி குடித்தும்மீ
எங்கெங்கும் தரைகொட்ட

இளங்காளை பலர்போகும்
இடத்தினில் அசிங்கமாங்கின்
வளரும்சமு தாயமேநீ
வெட்கப்பட வேண்டுமன்றோ!

44. இன்னமும் நீர் திருந்தலையோ...!

என்னருமை தமிழர்கள் - யானும்
என்னதான் எடுத்துரைப்பேன்
இன்னமும்நீர் திருந்தலையோ - உங்கள்
ஏற்றமிகு சிறக்கலையோ

குடிகார சமூகமென்று - மாற்றார்
கொடிநாட்டி விட்டனரே
குடிதன்னை ஒழித்திடவே - தலைவர்
குரல்வற்ற கூவினரே !

குடியும்நல் குடித்தனமாய் - அன்று
குரவர்தம் செப்பியதை
குடிமட்டும் தனைபற்றி - தவறாய்
குடித்தேநல் குணங்கெட்டீர்

தீபஒளி திருநாளில் - வேண்டும்
தெய்வத்தின் வணக்கங்கள்
தீபத்தைக் காணவில்லை - மதுவை
திறப்புவிழா முன்செய்தீர்

தூபத்தை மறந்ததினால் - இன்று
துயரத்தைப் பெற்றுவிட்டீர்
சாபத்தைப் பெற்றுவிட்டீர் - நமது
சாமியின் கோபத்தினால்

உயிர்க்கொலை கூடாதென - சமயம்
உணர்த்தியே கூறுதையா
வயிற்றினை நிரப்பிடவே - தினம்
உயர்க்கொலை யாகுதையா

சதையினை வளர்ப்பதற்கே - வேறு
சதையும்நீர் தேடுவதோ
வதையினை செய்துஉயிர் - தோணி
வயிற்றினை நிரப்புவதோ

மதுவோடு உயிர்க்கொலையும் - என்றும்
மறந்துமே வாழ்ந்திருப்பின்
புதுத்தெம்பு புத்துணர்ச்சி - ஆயுள்
பொலிவொடு நீள்வாழ்வீர்.

45. கொடு நஞ்சே வாழவிடு

எளியோரும் இளங்காளை இளம்பெண்ணும்
இல்லறத்து மாதர்களும் வாழ்வதற்கு
வலிவின்றித் துணிவின்றி கோழை போல்
உயிர்போக்க முனைந்துவிடல் நற்செயலோ....!
பலமுறையும் பல்லோரும் நல்லுரைத்தும்
பயன்கிட்ட வில்லைசெயல் தொடருவதேன்?
எளிதாக உயிர்மாய்க்கத் துணிவதுபோல்
எதிர்நீச்சல் போடமட்டும் துணிவிலையோ!

இனியேனும் மனிதர்க்கு செப்புவதில்
எப்பயனும் விளவதில்லை எனவுணர்ந்தே,
கனிவாக பணிவாகக் கெஞ்சுகின்றேன்,
கொடுநெஞ்சே மனிதரைநீ வாழவிடு
இனிதுவாழ காதலரை இணைத்துவிடு
இல்லறத்தில் வெற்றிபெற வழியைவிடு
கனியமுதம் வாழ்க்கையில் கலந்துவிட
களைக்கொல்லி கொடுநஞ்சே விலகிவிடு

குடிகாக்கும் குலமாதர் தனைகாக்க
களைக்கொல்லி கொடுநஞ்சே இரங்கிவிடு
படியேறி' சின்னவீட் டமைத்துத்தம்
பத்தினிக்கு துரோகமிழைத் திடுவோரும்
குடி செயலால் குடும்பத்து மாதர்களை
கொடுமை செய் கணவரையும் அச்சுறுத்து !
படியாத திருந்தாத கணவரையும்
பாதியிலே கதைமுடித்து அனுப்பிவிடு !

46. என்றும் கசப்பேது?

வீரம் செறிந்த தமிழினமா-அஞ்சி
உயிரை மாய்க்கும் இழிகுணமா
ஆருயிர் படைப்பே மனிதயினம்-அதனை
அழிக்க முயல்வது பெரும்பாவம்
காரிருள் வாழ்வில் படர்ந்தாலும்-நெஞ்சுரம்
காட்டியே முறியடித் திடவேண்டும்
பாரினில் பிரச்சனை யில்லாதோர்-மனித
பிறப்பினில் யார்தா னுள்ளாரோ

மனிதராய்ப் பிறந்திடல் அரிதொன்று-அதிலும்
முறையங் கங்களோ சிறப்பென்று
நனிநவில் கூற்றாம் ஔவையது-என்றும்
நானில மேற்கும் உண்மையிது
இனிக்கு மிள்மையிற் கசப்பேது-உள்ளம்
எதையும் தாங்கிடும் திடமேறின்
பிணியறு வாழ்வினை பெற்றிடுவோர்-உழைப்பில்
பெறலாம் ஏற்றப் படியினையே !

கூனர் குருடர் நொண்டியரும் - வெற்றி
குடும்பம் அமைதினில் கண்டிடுவார்
நாணுற வேண்டும் மற்றவரே - வாழ்வில்
நல்லுடல் பெற்றே தோல்வியுறின்
காணும் வாய்ப்புகள் எத்தனையோ-நாட்டில்
கண்டும் வாழ்வினில் தரித்திரமோ
வீணே தீவழி பற்றிவிட்டு-முடிவில்
வீழ்ச்சி வெறுப்பினில் தற்கொலையோ!

காதல் புரிவது தவறன்று-தோல்வி
காணின் மரிப்பது மதியன்று
பேதம் குடும்பத் திலுண்டெங்கும்-அதனை
பெரிதாய்க் கொண்டுயிர் போக்குவதோ
வாதம் புரிவதை விட்டொழிக-குணம்
விட்டுக் கொடுப்பதை மேற்கொள்க!
ஏதும் தொல்லைபின் வருமாயின் - இதயம்
இறைவன் நினைப்பின் அமைதிபெறும்.

47. வேண்டாம் வில்லங்கம்!

கடவுளிட்ட சாபமடா!
கள்ள வழியே பாபமடா
அடுக்காச் செயலினை புரிந்துவிடின்
அழிவே யும்மை அண்டிவிடும்
நடப்பும் நினைப்பும் நலமாயின்
நாடும் பலபிணி விலகிவிடும்
உடைமை உறுபொருள் திமிர்கொண்டு
வினையை நாடின் விலையுண்டு.

மறைவா யரிக்கும் நோயுண்டு
முடிவில் பறிக்கும் உயிர்வென்று
இறைவன் கூற்றில் வரையுண்டு
இதனை மீறின் முடிவுண்டு
அறிந்தும் சிலரின் விளையாட்டு
ஆருயிர் போகும் பழிபட்டு
விருந்தென மிகையாய்க் களிப்பவரே
விரைந்து மறைந்து போவாரே!

கொல்லும் ஒருசில நோய்தனிலே
கொடிய எய்ட்சே பயங்கரமாம்
மெல்ல மௌன மாயரிக்கும்
மறைவாய்க் குரிதி யணுவழிக்கும்
கள்ள உறவு விலைமாதர்
களவில் பெறுமிக பரிசிதுவே!
துள்ளும் வேகந் தனையடக்க
தொடர்பு பலரோடு உடலுறவு

கொள்ளும் ஆண்பெண் பாலருக்கு
கொடுக்கும் தண்டனை இந்நோயே
நல்ல மனையாள் உறவுக்கு
நாசம் விளைப்பார் காமனிவர்
கள்ளக் கணவன் சேர்க்கையினை
கொள்ளும் மனையாள் குழந்தைக்கும்
மெல்ல நுழையும் இந்நோயே!
முடிவி லதுவும் பலியாடே!

வாதை செய்யும் போதையினை
வழக்கம் கொள்ளும் பாழ்மனிதன்
போதை ஊசி பகிர்ந்துவிட
பெறுவார் எய்ட்சின் கிருமிதனை
வேதனை பின்பு உருவாகி
வெய்யில் மீனாய் துடிதுடித்து
சேதம் மெய்யில் பெருவாகி
சேர்வார் எமனின் பழிபாதம்

அறிவீர் எய்ட்சின் வில்லங்கம்
அழையா தீர்நீர் இல்லெங்கும்
மருந்தினை யறியா பிணியிதுவே!
மனத்தை யடக்கின் நனிவாழ்வே
ஒருவன் ஒருத்தி உயர்பண்பு
ஓங்க வாழின் பயமேது
வருமுன் காப்பது முன்னறிவு
வந்தபின் போவது பின்விளைவு!

48. புதைகுழிக்கு போகுமுன் காப்பாய்!

செல்லரித்துப் போனதிந்தச் சமுதாயம்-அதனைச்
சீர்திருத்த யார்வருவா ரினியேனும்
பள்ளத்தை நோக்கியது வீண்போகும்-நாமும்
பார்த்துச் சும் மாவிருந்தா வென்னாகும்
நல்லொழுக்கம் பேணிவந்த காலமுண்டு.
நாயினுங்கீழ் கேடாகப் போனதுண்டு.
நல்லவராய் வல்லவராய் வாழ்ந்தவரே-அந்தோ
நாலுபேரும் நகைக்கும்நிலை யானாரே.

பதவிக்குப் பேயாக அலைபவரும்-என்றும்
பணத்தாசைப் பிடித்துவெறி யாடுவோரும்
மதிபோக்கும் குடிமீது மோகமிட்டு-வீதி
கடையோரம் போதைகொள குடிப்பவரும்
பதைபதைத்து சீறிசின மடைபவரும்-கத்தி
பற்றிவெறி சண்டையிட துடிப்பவரும்
மிதமிஞ்சிப் போனதினால் வந்தவினை-இந்த
மன்பதையும் சீரழிந்து போகும்நிலை.

பெற்றவர்கள் அறிவுரையைப் புறக்கணித்து-காதல்
பித்தேறி பெண்தீய வழிநடந்து
பெற்றெடுப்பர் சிசுவொன்றை தாலியின்றி-பின்
பழிக்கஞ்சி வீசிடுவார் குப்பைத் தொட்டி
நற்செயலோ நன்னெறியோ பெண்பாவாய்-நவ
நாகரீகம் மிஞ்சியதோ நற்கூறாய்!
பொற்புடைய கற்புதனை பொசுக்கலாமா-தமிழர்
போற்றிவந்த மானந்தன்னை நசுக்கலாமா.

எங்கேயோ வழிதவறி குமுகாயம்-இவண்
இழிவுபட போகும்நிலை தடுக்கவேண்டும்
மங்கியது புதைகுழிக்கு போகுமுன்னே-நல்
மாற்றுவழி கண்டுயதை காக்க வேண்டும்
எங்களுக்கு என்னயிந்த வேலைதானா-என்று
எல்லாருமே இயம்பிவில கிப்போனால்
சிங்கமென வாழ்ந்தயினம் சீரழியும்-அதன்
சரித்திரமே முடிந்துவிட செத்தொழியும்.

49. குணமறிந்து கொடு

ஏறி உயர நினைப்பவன்-மனம்
இரங்கி கீழே வருகிறான்
ஏறி உயரச் சென்றதும்-ஏணி
எட்டி உதைத்து மறக்கிறான்
வாரி வாரி யளித்தவன்-பிறர்
வறுமைத் துன்பம் மழித்தவன்
மாறி வறிய னாகிடின்-பெற்ற
மனிதன் கண்டு ஒளிகிறான்.

குடும்பத் தொல்லை தேவையில்-கடன்
கேட்டு படிகள் ஏறுவான்
கொடுப்பார் பாவம் என்றாலும்-பின்பு
கொடுத்தார் படிகள் ஏறுவார்
அடுத்துக் கடுத்து கேட்டிடின்-கடன்
ஆவ லோடு பெற்றவன்
சிடுசிடுவென சீறுவான்-ஏசி
சொல்லில் மனதை வாட்டுவான்!

உலக நடப்பு இதுவடா-மனிதா
 உதவி னால்வரும் பழியடா
பழகும் போது மனிதனின்-பல
 குணம றிந்து தெளியடா
அளவ றிந்துஉதவடா-அஃதும்
 ஆளை யறிந்து அளியடா
குலவும் உறவு பகையடா-சிறிது
 விலகி யிருந்து பழகடா.

50. இல்லத்தை நூலகமாய் மாற்றுவீர்!

பிள்ளைதனை ஈன்றெடுத்து புவிதன்னைக் களித்துவிடின்
 பெற்றோர்க்கடன் முடிந்ததென எண்ணலாமோ!
கல்வியோடு நன்னெறியும் கணக்காக நல்லுணர்வும்
 கொடுப்பதிலே கடுகளவும் குறையலாமோ!
பிள்ளையினை பள்ளிதன்னில் பொழுதினிலே அனுப்பிவிடல்
 போதுமென முழு திருப்தி கொள்ளலாமேர!
நற்கல்வி நயமுடனே நன்கறிந்து கொண்டாரென
 நாமுறுதி செய்துகொள தயங்கலாமோ!

படிக்கின்ற பழக்கமதை பிஞ்சினிலே ஊட்டிவிட
 பெற்றவர்க்கு பெரும்பங்கு உண்டன்றோ!
கடிப்பதற்கும் சுவைப்பதற்கும் கண்கண்ட தின்பண்டம்
 கணக்கின்றி வாங்கித்தரல் தவறன்றோ!
படிப்பதற்கு ஏற்ற நூலாய் பிள்ளைகட்கு பெற்றுத்தரல்
 பெற்றோர்கள் செய்யும் பெரு செயலன்றோ!
படிக்கின்ற பழக்கமதை பிள்ளை இள அகவையிலே
 பிடித்திட்டால் எதிர்வாழ்வு சிறக்குமன்றோ!

நகரத்தில் கடைதன்னில் நூல்வாங்கி படிக்கின்ற
நம்பிள்ளை எண்ணிக்கை குறைவுதானே!
உகந்தநல் நூல்பெற்று விரும்பியவர் பயில்வதற்கு
வாய்ப்புத்தரும் பெற்றோர்கள் அரிதுதானே!
அகத்திலிடம் உண்டென்னில் ஆகாததும் ஆகுமன்றோ
அடித்தளத்தை இன்றே நீர் போடுவீரே!
தகுந்த பல நூல் பெற்று தம்பிள்ளை பயில்வதற்கு
தம்மில்லம் நூலகமாய் மாற்றுவீரே!

51. வள்ளுவரின் தவக்குழந்தை

ஈராயிரம் ஆண்டெனவே அகவையென்பார்
இயற்றியர் தனியொருவர் எனவியப்பார்
ஆராய்ந்து கருத்துக்களை உவமையோடு
ஆழ்ந்தெடுத்த முத்துக்களாய் அவரளித்தார்
சீராக வாழுதற்கு வழிமுறைகள்
செப்பினரே வள்ளுவரும் குறள்தன்னில்
நேரான நல்லமைதி வாழ்க்கைபெற
நாளொன்றாய் குறளறிந்து வழிநடப்போம்.

வள்ளுவனார் ஈன்றெடுத்த தவக்குழந்தை
வையகமே தலைவணங்கும் அதன்மகிமை
வெல்லுதற்கு அதற்கு இணை ஈடுமுண்டோ
வார்த்தையதன் ஏற்றிடாத நாடுமுண்டோ
பிள்ளையது வள்ளுவர்க்கு நமக்கில்லை
பேரறிஞ ரும்விழைவார் பொய்யுமில்லை
எல்லையின்றி கொண்டிலங்கும் கருவூலம்
இனியதமிழ் திருக்குறளாம் சொல்லமுதம்.

தமிழர்க்குக் கிடைத்தவர பிரசாதம்
தேர்ந்தறிவீர் நன்றுயதன் உபயோகம்
அமுதத்தை வேறெங்கும் நாடாதீர்
அருங்குறளை மாந்திடவே தவறாதீர்
இமைக்கவுமே மறக்கினும்நீர் ஒருபோதும்
இன்குறளை கற்றறிய மறவாதீர்
தமிழர் நாம் முந்தியற்நிந் தாலன்றோ
தரணியில்பிறர் அறியச்செயல் முறையன்றோ!

52. என் பயன்

கிழக்கினில் பரிதியின் வருகையால்
குவலயம் இருளினை வெல்லுமே!
மழலையின் புதிய வருகையால்
மங்கையும் தாய்மை கொள்ளுமே!
மழையெனும் வள்ளல் வருகையால்
மண்ணெனும் மாதா செழிக்குமே!
உலகினில் உன்றன் வருகையால்
என் பயன் விளைந்தது தமிழனே?

53. அலைவதேனோ?

ஆளுக்கொரு மூலைக்கொரு கோயில்கட்டி
அன்றாடம் முறையாகப் பூஜைசெய்து
வேலைவெட்டி செய்தபணம் செலவழித்து
விழாவெல்லாம் சிறப்பாக செய்து வந்தும்
ஏழைச்சமு தாயமெனும் பெயரைமாற்றி
ஏற்றமுற இவ்வுலகில் வாழ லின்றி
காலமெல்லாம் நமமினமும் இன்னல் பட்டு
கடைத்தேற வழியின்றி அலைவ தேனோ?

பயணம்...!
பயணம்...!

54. இலங்காவிப் பயணம்

தொல்லைபல உள்ளமெங்கும் துளைத்தெடுத்து கவலைதர
எல்லையற்ற பிரச்சனைகள் இரக்கமற்று கழுத்தறுக்க
முடிவொன்று மறியாது மனக்குழப்பங் கொண்டுழல
விடிவெள்ளி யாய்முளைக்கு முள்ளமகிழ் பயணமொன்று!
தமிழ்ப்பள்ளி பணியாற்றும் தலைமைஆ சிரியர்மார்
அமைதிமிகு பயணமிது! அவ்வண்ணந் தொடங்கினரே!
வளமான மலையகத்தின் வடபுலத்தில் புகழ்மேவும்
இலங்காவி தீவினுக்கு இளைப்பாறு மெண்ணமுடன்!

நள்ளிரவி லொருநாளில் நண்பரொடு பேருந்தில்
சொல்லவெண்ணா நீள்பயணம், சிரம்பான்நகர் விட்டேக
குவாலபெர்லிஸ் வரைநீளும், கும்மிருட்டு விடியும்வரை
அவாவுடன் இலங்காவி அங்கிருந்து கடற்பயணம்!

அன்னமென யாழிமீது அழகுநடம் பயிலுகின்ற
சின்னபெர்ரி மீதமர சீர்மிகுகண் காட்சியள்ளும்
கண்ணிரண்டும் போதாது காட்சிதரும் மாட்சிதனை
எண்ணற்ற தீவுகளும் எழிலாட்சி கடல்கொள்ளும்
யானைபோல ஆமைபோல இன்னும்பல உருவந்தன்னில்
காணபல கிடக்குதையா கடலெங்கும் தீவுகளே!

எத்தனையோ தீவுகளில் இலங்காவித் தீவுமட்டும்
முத்தாக வழிகாட்டி முகமலர்ந்து வரவுகூறும்
பச்சைமலைக் காடுகளும் பசுமைப்பாய் நிலமகளும்
அச்சமின்றி யாழிமகன் அரவனைப்பிற் றுயில்கொள்ளும்!
குவாவென்னும் பட்டினமும் கொண்டிலங்கும் சுறுசுறுப்பில்
அவாவுறு பயணிகளும் அங்காடியில் கூடியிருப்பர்

எங்கும்மலா யினத்தவரே இருப்போர்பலர் சீனர்களே
எங்கோசில ரிந்தியர்கள் எண்ணிக்கையில் குறைந்தவரே!

இன்னுஞ்சில விடந்தன்னில் எங்கள்பய ணந்தொடர
கண்பட்ட கவின்காட்சி கவிபாட நற்றூண்டும்
முதலைப்பண் ணையொன்று முத்தாக அத்தீவில்
அதிசயமா யமைந்திருக்கும்; அனைவரையுங் கவர்ந்திழுக்கும்!
குட்டிகளாய் முதலைகளும் கூட்டமாகக் குவிந்திருக்கும்
கட்டிவைத்த கூண்டுதனில் காட்சிதனைத் தந்திருக்கும்
அப்பப்பா யெத்தனையோ அகவைக்கேற் பமுதலைகள்
எப்படித்தான் கொண்டங்கு எழில்காட்ட வைத்தனரோ!
இத்தனையும் போதாதா... இன்னும்வரும் பயணிகட்கு
வித்தைபோல் முதலையொரு விளையாட்டு காட்டுகின்றார்

மசூரிப்பெண் சாபத்தினால் மணல்கூட கறுத்திருக்கும்
பசிபோக்கும் அரிசிமணி பார்க்ககறுப் பாயிருக்கும்
மங்கைஅந் நல்லாளின் மனம் நினைக்குங் கல்லறையும்
அங்குவரும் மக்களுக்கு ஆலயமாய் வீற்றிருக்கும்
மூன்றுதலை முறைமுடிவில் மங்கையிட்ட சாபம்போம்
என்றுமலாய் சரிதப்படி இன்றங்கு கருமாறும்

பளிங்குக்கல் பாறைமலை பார்க்கபர வசமூட்டும்
தொழிற்சாலை அருகமைந்து துண்டாக்கி வடிவமைக்கும்
பளபளப்பு மேனியென பலபொருளு மொளிகாட்டும்
விலைகேட்பின் மயக்கம்வரும் வாங்கமனம் தடைசொல்லும்
கல்வெட்டும் கத்தியினை காட்டிவிட்டா ரங்கொருவர்
மெல்ல அதன் விலைதன்னை மற்றொருவர் வினவிட்டார்
அய்யகோஅது ரிங்கிட்டு ஐம்பத்து ஐயாயிரம்
மெய்யாவென வாய்பிளந்து மெய்மறந்து சிலையானேன்

சுங்கைராயா தோட்டமதில் சீர்மிகுகோ யிலமைத்து
அங்குசிறப் பற்றுவாழும் அல்லல்மிகு தமிழர்களே!
இருப்பினுமோர் தமிழ்ப்பள்ளி ஏதோபெயர் சொல்லவென்று
ஒருபக்கல் மலாய்ப்பள்ளி ஒளிந்திருக்கும் பின்னின்று
தோட்டவீடு மாட்டுவீடு துவைத்தாடை சாயங்கெட்டு
காட்டுவழி பாட்டை தொட்டு காட்சிதரும் வெட்கக்கேடு!

மலையகமும் தாயகமும் மணமுடிக்குங் கடலங்கே!
களிப்போடு காற்றாட காதலுற வாடுமங்கே!
தென்றலங்கு தவழ்ந்துவரும் தெம்மாங்கு பாட்டுவரும்
பந்தாய்ரூர் கடற்கரையில்! பார்க்குமிடம் சவுக்குமரம்
சவுக்குமரத் தோப்பதனில் சரசமாடும் கடற்காற்று
உவப்புடனே இளநெஞ்சில் உடைப்பெடுக்கும் காதலூற்று!

இன்னுமெடுத் தியம்புதற்கு இலங்காவியில் இடமுண்டு
எனறாலும் மனங்கவரும் ஏற்றவிடம் குறைதானே!
காற்றாட உலவிவர காட்சிதனைக் கண்டுவர
ஏற்றதொரு இடமாகும் இலங்காவித் தீவுதானே!

இளைப்பாற களைப்பாற இன்பசுகம் நல்சுவைக்க
இலங்காவி பயணமது யாவருக்கும் பயன்தருமே!

55. முற்றும் கலக்கிய முதல் வான் பயணம்

வெளிநாட்டுப் பயணமொரு வாய்ப்பாகக் கிட்டிவிடின்
களிப்புமிகக் கொண்டிடுவோம் கனவுலகில் மிதந்திடுவோம்
எனக்குமொரு வாய்ப்பாக ஏற்றதொரு நன்னாளில்
மனப்பொப்பக் கிட்டியதே மறுத்தொதுக்கி விடுவேனா!
வானத்துப் புள்ளினமாய் வெட்டவெளி சிறகடிக்க,
தேன்பொழியும் வான்பயணம் தேடியெனை யற்றதுகாண்!
வானூர்தி பயணமதில் வயங்குகவின் காட்சியுண்டு.!
நானின்ப முறுவதற்கு நாள்கணித்து தவங்கிடந்தேன்.

அயல்நாட்டு பாஸ்போட்டு அனுமதியாம் சீட்டோடு,
பயணத்திற் கேற்பாடு பற்பலவும் செயல்பாடு.
ஆயிரத்து தொள்ளாயிர எண்பதாம்நல் ஆண்டிறுதி,
வாய்ப்பான பள்ளிறுதி விடுமுறையாம் நன்னாளில்
எனதுமுதல் அனுபவமாய் வான்பயணம்.. முகிழ்த்ததுவே.

தினமூன்று இருக்கையிலே தேவையான டிக்கட்டினை,
சிரம்பான்நகர் நிறுவனத்தில் செப்பிருந்த படியன்று,
பெறச்செல்லும் வேளையிலே பெருத்தவொரு ஏமாற்றம்.
பணமுன்பே கட்டிருந்தும் பயணடிக்கட் ஆங்கில்லை!
மனமுடைய வேண்டாமென மறுதினமே அழைப்புவிட,
அங்ஙனமே யான்விரைய அவர்டிக்கட் டளித்தனரே!
பொங்குமகிழ் உளத்தோடு புறப்பட்டேன் சுபாங்நிலையம்.

சோதகரும் டிக்கட்டினை சோதித்து அடுத்தகணம்,
வேதனையுற செப்புகின்றார் காத்திருக்கும் பட்டியலில்,
இவ்டிக்கட் உள்ளதனால் யாரேனும் செல்லாவிடில்

அவ்விடமே யான்பெறவே ஆகும்வழி உள்ளதென்றார்.

சிந்தையுனுள் சிறுதுளியாய்ச் சேமித்த பேராசை,
மந்திரம்போல் சிலகணத்தில் மாயமாகக் கரைந்திடுமோ,
என்றுள்ளம் அச்சமதில் ஏக்கமுற்று சமைந்தகணம்
இன்பமுற தேனொழுகும் இனியதொரு செய்திவரும்.

வானூர்தி ஓடுந்தடம் விட்டேக குறுநாழி,
தானிருக்க வேளைதனில் தேடிவரும் உடனழைப்பு,
பெரும்பெட்டி எடைபோட்டு பணங்கட்டி யனுப்பியபின்,
சிறுபெட்டி கைப்பெட்டி சேர்த்தென்னை சோதிப்பர்.
வருந்துன்பம் அடுத்தடுத்து வந்துதுயர் அளிப்பதுபோல்,
உறுந்துன்பம் கத்தரிக்கோல் உருவத்தில் உற்றதுவே!

ஊரிலொரு உறவினரின் விழைவுக்கொரு கத்தரிக்கோல்
காரியத்திற் கேட்டதனால் கைப்பெட்டி தனில்கொண்டேன்.
கையிலொரு ஆயுதமாய்க் கொண்டுசெலல் குற்றமென,
மெய்யறியா யிப்பேதை செய்யறியா மலங்கலுற்றேன்.

நாழிகையும் மெல்கழிய நான்வழியும் வேறறியா
வேளைதனில் அருகிருந்த விவரமறி யதிகாரி,
கத்தரிக்கோல் தனைப்பெற்று கேப்டன்தன் பாதுகாப்பில்,
வைத்திருந்து இறங்குமிடம் வந்தபின்பு பெற்றுக்கொள்
என்றாணை இட்டனரே! எனதுதுயர் தீர்த்தனரே!
நன்றியுடன் நயமுரைத்து நானுந்தான் விமானத்தில்,
ஏறிடவே வில்லங்கம் எதிர்கொண்டு மறுவழைக்கும்.
ஏறுகின்ற பயணிகளில் இறுதியாள் யான்தானே!
படிநின்ற யதிகாரி பகுதிகிழித் திடடிக்கட்
டெடுவென்றார்! நீட்டியதும் ஏற்றதனைச் சோதித்து.

ஏனோயிதில் முத்திரைதான் ஏறுவதற்கு சாற்றவில்லை,
வீணேகழி யாதுநாழி விரைபெற்று வருகவென்பார்.
செய்வதறி யான்மீண்டும் சிலையொப்ப சமைந்திட்டேன்!
ஐயமுடன் கைபிசைந்த அப்பாவி யானென்னை.
கெலித்தல்போல் விமானந்தான் கிளம்புதற் கறிகுறியாய்
கிளப்பிற்றே பேரோசை! கைக்கெட்டிய யிப்பயணம்,
வாய்க்கெட்டா விளைந்திடுமோ வருந்திமுற் றிரும்வேளை,
தாய்வயிற்றுச் சேயினைப்போல் தடதடவென் றதிகாரி,
வானூர்தி வயிறுவிட்டு விரைந்தோடி கீழிழிந்தார்.

யானவரின் சீட்டுதனில் கையொப்ப மிடுகின்றேன்,
இனித்தடங்கல் லேண்டற்க, என்றவுடன் ஏறவிட்டு,
இனிதுரைத்து கையெழுதி இன்பவழி காட்டியவர்.
என்னுள்ள முறைந்தவனாம் ஏறுமயில் வேல்முருக
னென்பவனே யனுப்பிட்ட இன்னல்தீர் தூதுவனோ!

வானூர்தி வயிற்றுள்ளே வந்தமர்ந்து களைதீர்ந்து,
யானும்பல தொல்லையெலாம் யெண்ணியுளம் சோர்ந்திருக்க,
எங்கிருந்தோ இன்பதுயில் இளங்கன்னி வந்தணைக்க,
பங்கமில்லா பறவைனதன் பஞ்சுவயி(ற்)றில் துஞ்சலுற்றேன்.

தேவலோக அந்தரத்தில் தென்றல்சுக கனவுலகில்
தேவகன்னி எழில்முகத்தாள் துஞ்சுமென்னை மெல்லெழுப்ப
கனியிதழில் தேனொழுக கண்ணிரண்டில் கள்வடிக்க
இனியமொழி மெல்லிசைத்து என்னெதிரே காத்திருந்தாள்
ஊர்வசியோ மேனகையோ உள்ளத்தினை கிறங்க வைத்தாள்
யாரென்று கண்தேய்த்து எழுந்தருகே நோக்குகையில்
பணிப்பெண்ணாள் பால்சிரிப்பு பொங்கலிட பகலுணவு

இனிப்போடு தட்டிலேந்தி என்னருகே நின்றிருந்தாள்
ஐயகோயான் ஏமாந்தேன் எனினுமவள் எழில்சுவைத்தேன்.

காலைவேளை விட்டபின்பு கடுந்துயிலில் மீட்டபின்பு
மாலைஎழில் வான்மாட்சி மனங்கவரும் தேன்காட்சி
பொட்டலெனும் வான்வெளியில் பால்பொங்க நுரைமிதக்கும்
வெட்டவெளி பஞ்சுப்பொதி கண்குளிர களித்திருந்தேன்!
எண்ணத்தில் வண்ணஆட்சி எழுத்தில்வடித் திடயியலோ!

கோலாலம் பூர்தொட்டு குலவிவரும் வெண்முகிலாம்
கோலமென எழில்காட்ட கண்சுவைத்த இனிப்பின்பு
சிங்களத்து செழுமைதனை செம்மாந்து சுகங்களிக்க
எங்களூர்தி ஏர்சிலோனாம் எழில்வட்டம் போட்டதுவே!
இருள்மகனை பகலவனும் எதிர்கொண்டு யழைவேளை
தெரிகின்ற செம்மண்ணில் தென்னம்பெரு தோப்புக்களும்
திட்டான தீவினிலே செட்டான பலகுடில்கள்
மொட்டையாய் சிலவிடங்கள் மொழுமொழுப்பாய் சிலபச்சை
எறும்பெனவே ஆளூரும் எழில்மலையாம் ஒருபக்க்ல்
நிறைவான காட்சியினை நிலமகளும் காட்டவில்லை!

பகலவனை இருளரக்கன் பிடித்துத்தனி விரட்டிவிட்டு
மகிழ்வோடு நிலமகளின் மென்மேனி தழுவிவிட்டான்
நிலமகளும் சூதறிந்து நெடுந்துயர முற்றதாலே
சிலநாழி களுக்குள்ளே சீற்றமென காற்றடித்து
'சோ' வென்று புயல்வீச சோதனைவந் துற்றதென்று
'ஆ' வென்றே பயணிகளும் அலறிவிமா னத்துள்ளே
அரண்டழுது புலம்பினரே! ஆருயிரும் அந்தரத்தில்
பரலோகம் போகுமென பயந்தசில பக்தர்களும்
இந்துக்கள் கிருஸ்தவர்கள் இஸ்லாமியர் புத்தர்கள்

அந்தந்த கடவுள்பெயர் ஆராதனை செய்தனரே
அப்போதும் வானூர்தி அலைபோல ஆடியதே!
தப்பாத புயல்வெறியில் தத்தளித்து நகர்ந்ததுவே!

உள்ளிருந்த மக்களெல்லாம் ஓங்கார குரலெழுப்ப,
சுள்ளென்று அண்டையிரு சிவலோகம் சுட்டதுவோ!
சுணக்கமின்றி ஈசனாரும் செய்திதனை உடனறிந்தோ
கணப்பொழுதில் காற்றனவே கட்டளையை இட்டனரோ!
அரைமணியில் அலைக்கழிந்த ஆங்கார புயலரக்கன்,
பெருமனமே கொண்டுமிக பொறுமைதனை கடைபிடித்து,
மெல்லியதன் கோரப்பிடி மென்னிதனை விட்டதுபோல்,
நல்லதொரு செய்தியினை நம்பிக்கை யூட்டுவதாய்,
பீதியுற வேண்டாமினி பயணிகளே நீங்களெல்லாம்,
பாதுகாப்பாய்த் தரையிறங்க பாதையொன்று புலப்படுமே!

மூண்டிருந்த மேகமூட்டம் மெல்லாடை தனைவிலக்க,
தாண்டிட்டோம் ஆபத்தினை தேவையன்று இனியச்சம்,
என்றுரைத்தா ரதிகாரி எண்ணி சில நாழிகையில்
மண்தொட்ட வான்கப்பல் மகிழ்வுதர தடமோடும்.
இந்தியமணி எட்டரைக்கு இருள்கொழும்பு வந்தெய்தும்,
எந்தவொரு தடங்கலின்றேல் ஏழரைக்கே வந்திருக்கும்.

தனிவேறு விமானத்தில் தமிழ்நாடு பயணமுற,
இனியிரண்டு மணிவரையில் ஏங்கிக்காத் திடல்வேண்டும்
ஏர்சிலோனின் ஏற்பாடே! இனியானும் ஏர்சிலோனில்.
ஊர்பயணம் ஏற்பதில்லை. என்றுறுதி எடுத்துவிட்டேன்.

ஒன்பதுமணி யானபோழ்து ஊர்தியொன்று தரையூர,
நன்றதுதான் எனக்கொண்டு நண்பரொடு நானேற,

அங்குள்ளே அமர்ந்திருந்தோர் அனைவருமே சிங்களவர்
எங்களுக்கோ ரய்யம்வர இருந்தோரில் ஓராளை,
சகநண்பர் தாம்வினவ, சிங்களத்தில் அவர்செப்ப,
திகைப்புற்றார் தோழரவர், தமிழ்நாட்டைச் சார்ந்தவரே!

மலேசியவாழ் உறவினரின் மணக்கோலம் காண்பதற்குக்
களிப்போடு வந்திருந்தார், காண்பவற்றை கண்சுவைத்துத்
திரும்புகின்றார் பரிசிலொடு! தோகைமயில் பணிப்பெண்ணாள்
அருகிருந்து கேட்டறிந்து ஆங்கிலத்தில் செப்புகின்றார்.
தொலைதூர துபாய்க்குத் தொடர்கின்ற விமானமிது
சிலகணத்தில் புறப்படுமே! சடுதியினில் இறங்கிடுவீர்.
என்றலுமே யாமிருவர் இறங்கிட்டோம் மறுகணமே!
நண்பரவர் நகைத்திட்டார்! யானுமெது புன்னகைத்தேன்!

சிங்களத்து சிங்காரி சிருங்கார மொழிபேசும்
அங்கிருந்த கடையொன்றில் அருமைத்தே நீர்சுவைத்தோம்!
மின்னுமோ ரங்காடி தனில்நவரத் தினகற்கள்,
கண்ணாடி பேழைக்குள் க்ண்குளிரக் காட்சிவைத்தார்,
விலைதன்னைக் கேட்டறிய வியப்போடு மயக்கம்தர,
தலைசாய இருக்கையிலே தள்ளாடி நானமர்ந்தேன்.

அத்தருணம் நண்பரவர் அதிர்ச்சியுறும் செய்தியுரைப்பர்
புத்தரினைப் போற்றுகின்ற புனிதவிடம் கொழும்பினிலே,
மாறுகின்ற விமானந்தனில் பயணிகள்தம் உடைமைதனை,
ஜோராக பூட்டுநீக்கி சிங்களவர் களவுசெய்வார்.
என்னுறவுக் காரர்தாம் இவ்வண்ணம் வானொலியை
முன்னமொரு முறையிழந்து மனநொந்து மனைபோந்தார்.
என்றவரும் செப்பிவிட எனக்குமுடன் உறுங்கவலை,
வண்ணமிகு சேலைத்துணி வகைவகையாய்ப் பேழைதனில்

உள்ளடக்கி பணஞ்செலுத்தி உற்றவர்க்கு கொணர்கின்றேன்!
கொள்ளையவை போய்விடுமோ கொடுக்கயிய லாகிடுமோ!
என்னுள்ளே மலங்கையிலே இன்னுமவர் தொடர்கின்றார்.
என்பேழை தனிலிரண்டு எழில்மிகுவா னொலிப்பெட்டி,
அன்புப்பரிசி லெனயானும் ஆசைமிகக் கொண்டுள்ளேன்.
முன்விளைந்த கொள்ளையினை முற்றாக மறந்தொழிந்தேன்.
என்னாகும் இப்பரிசில் இவற்றோடு மூன்றுகடி,
காரங்கள் மறைத்துள்ளேன் கவலைக்கனல் வாட்டுதையா!
தேர்ந்திடுமோ அப்பொருளும் திருடர்கண் குருடாகி
என்றழுது புலம்பலுற்றார். என்செய்வ தறியாநான்,
பின்ஆறு தல்மொழியும் போழ்திலொரு ஊர்திவர,
பூமித்தாய் முத்தமிட்டு புழுதிபட நின்றுவிட,
ஆமாமிது பயணித்திடும் அவ்வூர்தி என்றலுமே,
கடுகியுடன் கைப்பொருளை கரம்பற்றி ஓடலுற்றேன்.
உடனிருந்த தோழரவர் உயிர்பிடித்து பின்தொடர்ந்தார்.

வானூர்தி வயிற்றுக்குள் வந்தமர்ந்த பயணிகளுள்,
யானுமென்றன் நண்பருமே இறுதிநபர் பாவப்பட்டோம்
வெளியுலகில் இருள்கவிழ விமானத்தினுள் ஒளியுமிழ,
களைப்புற்ற பயணிகளோ கண்சோர தியானித்தனர்.

ஒருமணியாய் மையிருட்டில் வான்பயணம் வளர்ந்ததுவே!
உருப்படியாய்ச் சென்னைநகர் உறவாட அணைந்ததுவே.

கைப்பொருட்கள் தனைப்பற்றிக் கலகலப்பாய் முந்தியுற,
மெய்வருந்த கால்நோவ மெல்லஅடி நானிறங்க,
கடைசிப்படி அளக்கையிலே காற்றோடு உறவாடி,
மடாரென்று பெட்டியொன்று மேல்விழுந்து தோளொடிக்க,
ஐயோஅம்மா வென்றலறி அடிபரப்பி தரைவீழ்ந்தேன்

தெய்வயருள் நற்பயனாய் தீங்கேதும் விளையவில்லை.

இருப்பினுந்தோள் பட்டைவலி இன்னுயிரை வாட்டிடுமோ!
நெருப்பாய்மிக கனன்றதுவே, நெஞ்சமெல்லாம் நொந்ததுவே!
பெட்டிதனை கைகழன்ற பெரியவரும் கீழிழிந்து,
தொட்டென்னை மன்னிற்க தவறிக்கை விட்டதென்றார்.
பட்டவலி குன்றவில்லை, பெரியவரா யென்றலுமே,
முட்டிவரும் சினக்கொழுந்தை முனகலுடன் முறித்துவிட்டேன்.

அடுத்துவரும் சோதனைக்கு ஆளாக யான்வேண்டி
சடுதியினில் இயந்திரத்தில் சுழன்றுவரும் பேழைநாட
பரபரப்பாய் பக்கலிலே பார்வையினை செலுத்திருக்க,
உருப்படியாய் என்பேழை உடன்தோற்றம் காட்டவில்லை!
நின்றவரும் வந்தவரும் நல்லபடி தம்பேழை.
கண்டெடுத்து போந்தனரே! காணாத்தனி மரமானேன்!
நாழிகையும் வீண்கழிய நட்டாற்றில் தத்தளிக்க,
பாழான முகமாகி பரிதாப நிலைகொண்டேன்.
நிலையறிந்த அதிகாரி நண்ணினரே என்பாலே!
விளக்கமிகு கொண்டபின்பு விவரம்பெற உள்போந்தார்.

அத்தருணம் உடன்வந்த அருந்தோழர் ஒருபக்கல்,
பத்திரமாய்க் காத்தபொருள் பறிபோன நிலைகலங்கி,
மெய்சோர புலம்பலுற்றார். மெதுவாய்யான் அவரண்டி,
செய்வதினி ஏதுமில சென்றநினை பயனுமில,
எனத்தேற்றி யானிருப்ப எனைத்தேற்ற யாருமிலர்!

அச்சமயம் உள்ளிருந்த அதிகாரி வெளிப்போந்தார்,
பச்சாதா பங்கொண்டு பொட்டலமொரு எனக்கீந்தார்.
என்னென்று பிரித்துஉள் எடுத்துயான் பார்க்கையில்,

முன்கொடுத்த கத்தரிக்கோல் மலர்ச்சியுடன் தலைகாட்டும்.
நன்றியுடன் நான்பகர நட்போடவர் தோள்தட்டி,
என்னவென்று யானுரைப்பேன், உங்கள்பெரு பெட்டகமோ,
வழிமாறி வேறெருவான் ஊர்தியினில் சென்றறிந்தோம்
கலங்காதீர் நாளைவரை காத்திருந்து திரும்பிவரின்,
தடையின்றி பெற்றிடலாம் தவற்றினுக்கு வருந்துகிறோம்,
உடைமையினை ஒப்படைக்க உறுதிமொழி தருகின்றோம்.

என்றவரின் சொற்கேட்டு எரிமலையாய் யான்வெடிக்க,
நன்றாய்ப்பழி வாங்கியெனை நடுத்தெருவி லலையவிட்டீர்,
யார்கூறிப் பயனென்கொள் என்தலைவிதி யென்பேனா!
சீரற்ற நிருவாகம் செய்பிழையின் கரணியமே
என்றுமன ஆதங்கத்தை எரிசொல்லால் இறக்கிவிட்டு,
கண்நோவ பலமணியாய் காத்திருக்கும் உறவுக்கு,
கண்மலர முகம்நடித்து காட்சிதனை யளித்திட்டேன்.

என்னென்ன! பதற்றவினா என்னுற்றார் கணைதொடுத்தார்.
காலமிகு தாழ்த்தியானும் கடுகடுப்பாய் வரக்கண்டு!
வேளையிது அல்லஅல்ல! விவரமிகு வினவிடவே,
இல்லந்தனில் சென்றபின்பு இளைப்பாற விட்டபின்பு
மெல்லநல மறிவோமென மூத்தநபர் நன்றுரைப்பார்
இருப்பினும்ஆ வல்தூண்ட இருக்கையிலே அமைதிபேணும்,
உறவுக்கு விளக்கம்தர உள்ளமென்றன் உசுப்பிவிட,
செல்லும்வழி விவரத்தினை செப்பிடவே அவரறிந்து.
சுள்ளென்று காரமுடன் சபித்தார்அதி காரிதனை!

பெட்டியோடு உடுப்புக்களும் போயிருந்த நிலைகண்டு
கட்டியிருந்த ஆடைகளும் கழற்றிடவே வழியுமில்லை
வேட்டியோடு சட்டைகளும் வேறொருவர் உடுப்போடு

மாட்டிக்கொள மூன்றுதினம் மாற்றுவழி தோன்றவில்லை!

சென்னைநகர் உறவினர்தம் சீரற்ற குடிசைதனில்
எண்ணற்ற சீர்கேட்டில் எழுப்பும்பல பிரச்சனைகள்
உடுப்புகளும் உடமைகளும் ஒன்றுமில்லா அவலநிலை .
கடுப்பாகிப் போனதுவே கனத்தமூன்று தினமதிலே
செலவழிக்க பணமுமில்லை, சில்லரைக்கு வழியுமில்லை!
கழிந்தஅம் மூன்றுதினம் கழிவிரக்கம் காட்டவில்லை!

தினமூன்றில் பெட்டிபெற துடிப்போடு சென்றிருந்தேன்!
எனக்காங்கே அதிர்ச்சியொன்று இடியாய்வர வேற்றதுவே!
கண்மயக்கும் பெண்ணழகி காமுகன்கை பட்டதுபோல்
என்பேழை அடிபட்டு எழில்குழைந்து வந்ததுகாண்!

என்னவென்று யான்பகர என்மனமும் வருத்தமுற
கண்கள்தனில் நீர்மல்க கனப்பேழை எடுத்தகன்றேன்!

எனதுமுதல் பயணமிது எல்லையின்றி தொல்லைதந்து
நினைவைவிட் டகலாத நல்லதொரு பாடந்தரும்
உண்மையிச் சம்பவத்தை உள்ளமென்றும் மறப்போமா!

தூரத்துப் பச்சை

(குறுங்காவியம்)

காப்பு:

ஈன்றெடுத் திட்ட அன்னை
இவ்வுல கின்கண் முதலாய்
தோன்றிய பொழுதிற் றமிழே
தெரியவே வைத்தா ளுன்னை
ஈண்டிவண் என்பா வெல்ல
இனியஉன் மலரடி போற்றி
வேண்டுவேன் காப்பா யென்றே!
வாழ்த்துவாய் அன்னைத் தமிழே!

தூரத்துப் பச்சை

பால்மரக் காட்டுப் பக்கம்
பசுமலைச் சாரல் ஓரம்
ஆல்படர் மரத்தண் நிழலில்
அடியிடை யிரண்டு உருவம்
கால்கை பின்னிப் பிணைந்து
கட்டுண் டிருக்கும் வேளை
மேல்மரக் கிள்ளை யிரண்டு
மெல்லென எட்டிப் பார்க்கும்.

நாட்டினுல் காதல் விளைக்க
நால்வரும் தடைசெய் வாரே
காட்டினி லதனை முடிக்க
காதலர் விரைந்தா ரென்றே
காட்டிடைக் கள்ளை யாணும்
காதலைக் கொண்டு சொல்லும்
கேட்டுமே பெண்ணாம் கிள்ளை
களிப்புடன் ஆமோதிக்கும்.

கிள்ளைதன் மொழிசெவி யுற்று
காதலர் போதை தெளிந்தார்
மெல்லவே அணைப்பை விடுத்து
மேலொளி வானம் அளந்தார்
சொல்லிட காலஞ் செல்ல
சென்றதோ நினைவு இல்லம்
துள்ளியே யெழுந்தா ரவரும்
துரிதமாய் நடைநீள் போட்டார்

கைதனை இடையில் கோர்த்து
காதலர் களித்து விரைய
ஐயகோ அவ்வழிப் போந்த
அண்டைவாழ் இல்லத் தலைவன்
பையவே கடைக்கண் பார்வை
புன்னகை யோடு வீச
நையவே புடைப்பார் பெற்றோர்
என்றுஉள் நைந்தாள் நங்கை!

கவலையை விடடி கண்ணே!
காதலே சோதனை யென்றே,
துவண்ட மாதவி யள்ளி,
தேற்றுவான், பாண்டிய னென்பான்.
ஆவியே விடினும் உம்மை
அன்றியே வேறொர் நினையேன்.
சாவிலும் உனையே வரிப்பேன்.
சத்திய மென்றா ளவளும்.

பஞ்சுபோ லுள்ளந் தன்னை,
பாறைபோ லாக்கித் துணிவை,
நெஞ்சிலே யேற்று இல்லம்,
நெருங்கினாள் புலிநடை போட்டு!
வஞ்சகன் செய்தி பெற்று,
வாயலில் நின்ற பெற்றோர்,
வஞ்சியின் வரவைக் கண்டு,
வெஞ்சினம் காட்ட வில்லை!

தெளிந்தநீ ரோடை போன்று
துலங்கிய அமைதி முகத்தில்,
கலக்கமோ சிறிது மில்லை.
கண்ணென பெற்றவ ரிடத்தில்!
பொழுதுமே சாய விருந்து,
பேதைநீ தனித்து வருதல்,
விளைந்திடும் ஆபத் தறிவாய்.
விரைந்தினி வரவே கற்பாய்!

என்பவே தந்தை பகர்வார்!
ஏந்திழை யாளும் மிசைவாள்.
அன்னையும் அன்பைச் சொரிந்து,
அணைப்பினில் அழைத்துச் செல்வாள்..!
விண்ணுடன் மண்ணு மெதிர,
வெடிக்குமே எரிமலை இல்லில்
என்றவள் தயங்கிய காலை,
இன்முக வரவு காட்டும்,

பெற்றவர் போக்கினைக் கண்டு,
பெருந்திகைப் புற்றாள் கன்னி!
உற்றநல் நேர மிதுவே,
உரைத்திடு காத லென்று,
குற்றமில் மனமு முந்த,
கோதையாள் குழைந்து சொல்வாள்,
சற்றுமில் லெதிர்பா ராது,
சிறுகணம் திகைத்துப் பின்னர்,

அன்னையும் தந்தை நோக்க
அவர்கண் சாடை காட்ட,
பெண்ணேஉம் காத லறிவோம்.
பொறு! மணம் முடிப்ப தற்கு,
முன்னமோர் செயல்மு டிக்க,
முற்றுமும் ஒத்து ழைப்பு,
நன்றுமே யளித்திடு வென்பார்.
நயமுடன் அன்னை யணைத்து!

கனவினில் உலவும் மனத்தை,
கடிதுமே வலிந்து பற்றி,
மனம்போல் வாழ்வு கிட்டின்,
மங்கையான் மறுத்திடு வேனா!
கணம்வீண் கழித்தி டாது,
களறுவீர் கருமந் தன்னை.
எனப்பெண் மயங்கி செப்ப,
ஈன்றவள் எண்ணிச் சொல்வாள்.

பெற்றவள் பிள்ளை தன்னை,
பிழைப்புக் குத்துரத் திவிட்ட,
நற்றமிழ் நாட்டி லத்தை,
நலங்கெட இறுதி மூச்சில்,
பற்றுடன் தந்தையோ டுன்னை,
பார்த்திட துடிக்கின் றாளாம்.
சற்றுமி னிதாமதி யாது,
சடுதியில் பயண மென்றாள்.

தந்தையும் மகளை யண்டி,
திரும்பிய வுடனே யும்மை,
சிந்தையுன் கவர்ந்தவ னுக்கே,
சீர்மணம் முடிப்பே னென்பார்.
மந்திரத் தாலே கனியும்,
மடியினுள் விழுந்தாற் போல
தந்தைதன் சொல்லினைக் கேட்டு,
தையலும் இரும்பூ தெய்தாள்.

திரைமறை தன்னில் பெற்றோர்,
தீட்டினார் நரித்திட் டங்கள்.
விரைவினில் பயணம் தடபுடல்,
வேகமாய் நடக்கும் போழ்து,
மறைவினில் காதலன் ஓர்நாள்,
மாதவி அண்டிச் சொல்வான்,
கரைகடந் துன்னை யழைத்து,
கனிவுடன் செல்வ தெல்லாம்.

தெய்வநம் காதல் கொன்று
தமிழக மாப்பிள் ளைக்கு,
மெய்யுனை பலியாக் கிடவே
முயற்சியும் நடக்கு தறிவாய்,
செய்பல நகைநட் டுனக்கு,
செய்தியும் அறிவே னென்பான்!
ஐயகோ! பாசந் தந்தார்,
அயலூர் மண்ணில் புதைக்க,

என்னையே தாரை வார்த்து,
எங்ஙனம் இசையத் துணிவார்!
என்றனள் காளை யணைப்பில்
மழையெனக் கண்ணீர் உகுத்து,
பெண்மனம் விழைவுக் கொப்ப,
பெற்றவர் நடத்த லரிதே!
உன்னைமண் பொம்மை யென்றே,
உற்றவர் எண்ணுந் தன்மை,

வென்றிட வேண்டு மாயின்,
வீறுகொண் டெழவே வேண்டும்.
நன்மைபயக் காதென் றுணர்வின்,
நெஞ்சமர் காதலர் போந்து,
இன்மனம் முடிக்க வேண்டும்.
எனப்பாண் டியன்சொல் லிப்பின்,
மென்மனப் பெண்ணின் செவியில்,
வல்வழி யொன்றைச் சொல்வான்.

அவ்வழி அணங்கு கேட்டு,
அஞ்சியே மறுப்புச் சொல்வாள்.
இவ்வழி யேற்கா தாயின்,
ஏற்றஉன் வழிமொழி என்றான்.
செவ்விய லழியொன் றறியாச்
சிந்தையில் குழம்பிய பெண்ணாள்,
ஒவ்வினாள் அவன்வழி முடிவில்,
ஒவ்விடா அரைமனத் தோடு!

புதுப்புது அணிகல ணாடை,
பொன்னகை மணப்பெண் ணணிய,
விதவிதத் தோற்றப் பொலிவில்,
வேண்டியே சேர்த்தார் பெற்றோர்.
மதியினில் வகுத்த யுக்தி,
மாண்புற உன்னிச் செய்தும்,
விதியொரு குறுக்கே பாய்ந்து,
வகுத்தவர் வழியை மாற்றும்.

நிதிமிகு திரட்டிப் பயணம்,
நலமுற ஏற்பா டெல்லாம்,
அதிவிரை செய்து பெற்றோர்,
அடுத்தொரு வாரங் காக்க,
சதிப்பேய் இருவர் பக்கல்,
சத்தமின் றாடிக் குதிக்கும்.
விதியெனும் சனிப்பி சாசு,
வெறுங்கை தட்டிக் கெலிக்கும்.

பாண்டியன் வகுத்த வழியில்,
பாவையும் பறந்தே போனாள்.
ஆண்டுகள் காத்த மானம்,
அரைநொடி போன தோடு,
வேண்டிய பொருட்க ளெல்லாம்,
விலையுயர் நகைக ளோடு,
தோண்டியே சுருட்டிப் போனார்,
தொலைவினில் மறைந்து போனார்.

பெண்ணொடு மானம் போக,
பொன்னோடு பொருளும் போக,
கண்ணிமை காத்த தந்தை
கடுமிடி நெஞ்சில் தாக்க
மண்டையைப் போட்டா ரந்தோ!
மனையாள் அதிர்ச்சி யுற்றே!
தன்னிலை மறந்து பித்தம்
தலைப்பட அலைய லுற்றார்

ஐயகோ பெற்றோர் நிலையும்,
இவ்விதம் நேர ஆங்கே,
பொய்யனை நம்பிப் பின்னே,
போனவள் கதியோ நாசம்.
கையினில் பொன்னும் பொருளும்,
கரைவரை காதல் தேனாய்,
மெய்யவே இனிக்கும் பின்னே,
மெல்லவே கசக்கும் காயாய்!

இன்பமும் அள்ளிப் பருகி,
ஏந்திழை பொருளும் மாந்து,
தன்னலம் பேணி யவளை,
தனியளாய் விட்டுச் சென்றான்,
மன்னவன் பெயர்ரக் கொண்ட,
மகாபா விசண்டா எந்தான்.
கண்ணினும் பெண்மை விற்று,
கருத்தினில் சோரங் கெட்டு,

அன்னைதம் இல்லம் போந்தாள்,
அவசரக் கோல மாது!
தன்னிலை யறியா தாயும்,
தன்னிலை மறந்த சேயும்,
ஒன்றிணைந் திடும்நல் வேளை,
உணர்ந்திடும் உள்ளம் பெற்றார்.
கண்மழை பெருக்கெ டுத்து,
கழுவினர் பாவச் சேற்றை!

திருவிட மலைநாட் டுள்ளே,
தேர்ந்தொரு வரன்மு டிக்க,
அறிந்திடா பெற்றோ ருக்கும்,
ஆய்ந்தறி யாஆண் மகனை,
கருத்தினில் கொண்டு வரிக்கும்,
கன்னிய ரனைவ ருக்கும்,
இறுதியி லாகும் விளைவை,
இக்கதை பாட மாக்0கு



பைந்தமிழ்ப் பாவலர் பழனியாண்டி
சின்னருணா என்னும் சிந்தனையாளர்
இன்றமிழ்க்கவிதைகள் இருநூறுக்குமேல்
மரபு வழுவா மாண்புடன் இயற்றியவர்!
பரிசு பெற்ற பாக்களும் பலவாம்!
சிறுகதை தொடர்கதை குறுந்தொடர் முதலிய
பலவும் எழுதி பரிசும் பெற்றவர்!
மலேசியத் தமிழருள் மாண்புடன் திகழ்பவர்!
தமிழும் தமிழினமும் தகவுடன் உயர,
சிந்தனைக் கனலைச் சிறப்புடன் படைத்துளார்!
பைந்தமிழ்ப் புலவர் பழனியாண்டி
பாரெலாம் போற்ற வாழ்க நன்றே!

ஆ.வே.இரா.

நூலாசிரியர் எழுதி வெளிவந்த நூல்கள் :

1. சின்ன மலர்கள் (சிறுவர் பாடல்கள்)
2. தமிழைப் பிழையின்றி எழுதுவோம் (இலக்கண நூல்)
3. நிலவுக்கு எட்டாத வானம் (சிறுகதைத் தொகுப்பு)
4. சிந்தனைக் கனல் (கவிதைத் தொகுப்பு)
5. மாணவர் கதைகள்